ജ്ഞാനനിക്ഷേപം
V2. NO.31 8 Ag 1929

JL
N29.2.81
189066

128

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஹு ஆகஸ்டு மீ 8உ [No. 31.

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader).	601
2.	வில்லிபாரதம் (காண்டவதகனச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை B.A., B.L.	603
3.	சிந்தாமணி நீதிச்செய்யுள் V. பரமசிவன்	605
4.	குலசேகரர் (பேயாழ்வார்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L	606
5.	மாறன் பாப் பாவினம் (பரிபாடல்)	608
6.	அப்பர். (விஸ்தார கவி) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	609
7.	தமிழ்ப் பாடம் (திருவேங்கடமாலை)	611
8.	கம்பராமாயணம் (வரைக்காட்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L.	613
9.	வர்த்தமானம்	619

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்

கல்சரும் கவிதையும்.

II

குழந்தைக்கும், அதுவைத்து விளையாடும் பதுமைக்கும் உள்ளவோர் உறவேபோன்றது கவிதைக்கும் அது கையாளும் உயரியவிடயங்களுக்கு முள்ள உறவு என்று முன்னர்க் கூறி முடித்தோம். இவ்வொற்றுமையை உணர்ந்தால், பகுத்தறிவிற்கும் மனோபாவத்திற்கும் இடைகிடக்கும் வேற்றுமையைத் தெரிந்து கொண்டதாகும்.

சித்திரப் பதுமையொன்றை நாம் பார்க்குங்கால் என் செய்கின்றோம்! "இது எதனாற் செய்தது— மண்ணோ, மரமோ, வெள்ளியோ, பொன்னோ? எவ்வூரிற் செய்தது — தஞ்சையோ, புதுவையோ, சீமையோ? வேலைத்திறம் நன்கமைந் திருக்கின்றதோ? என்ன விலைபெறும்? இதுவாங்கிப் பயனுண்டோ?— அல்லது இவைகளை வாங்கிவிற்று இலாபம் சம்பாதிக்கலாமோ?" என்று இன்னவகையில் நமது எண்ணங்கள் தொடர்கின்றன. இவ்வெண்ணங்கள் அப்பதுமையை நோக்கியதால் பிறந்தன. பிறந்த அவ்வெண்ணங்களில் ஒவ்வொன்றும் மற்றவைகளோடு சம்பந்தப்படும். மட்பதுமையாயின் புதுவையிற் செய்திருந்தால் நல்லதென்றும், வெள்ளியாயின் தஞ்சைவேலை உயர்ந்ததென்றும், புதுவையிற்செய்த மண்பதுமைக்கின்னவிலை யென்றும், இப்படியே ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி நினைக்கின்றது நம் மனம். இப்பதுமையைப்பற்றி நமக்கு முன்னரே தெரிந்திருக்கின்ற தன்மைகளை இப்பொழுது கணக்கெண்ணிப் பார்க்கின்றோம். இப்பதுமைக்கு விலை எட்டணாவே கொடுக்கலாம் என்று நினைக்கும்போது, அது மண்ணாற் செய்தது என்ற எண்ணமும் புதுவையிற் செய்யப்பட்டது என்ற எண்ணமும் ஆகிய இவ்விரண்டு எண்ணங்களுக்கு முள்ள சம்பந்தத்தைப்பற்றிச் சிந்திக்கின்ற நிலையில் நம் மனம் அமையலாகின்றது. அமைந்து எட்டணாவிலை என்ற முடிவிற்கு வருகின்றது. இம்முடிவே முற்றிய முடியவா யிருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. அந்த முடிவும் ஒரு எண்ணத்தின் தன்மையதாய் இடைநின்று வேறு எண்ணங்களோடு சம்பந்தப்பட்டு மற்றோர் முடிவிற்கும் இடந்தரலாம். "ஒன்றாக வாங்கினால் எட்டணா விலை, பத்து வாங்கினால் விலை குறையும். குறைந்தவிலைக்கு வாங்குவது இலாபம்" என்றிப்படித் தொடர்ந்துகொண்டு போவதுங் கூடும். இதுதான் மனத்தின் பகுத்தறிவு என்னும் பாகம், இங்குப் பதுமையைப் பார்த்ததால் பிறந்த எண்ணங்கள் ஒவ்வொன்றும் மற்ற எண்ணங்களோடு சம்பந்தப்

படுவதைக் காண்கின்றோமே யன்றி, நம் மனம் அவைகளோடு கலக்கவில்லை. வருகின்ற முடிவிற்கு அவ்வெண்ணங்கள் தனித்தனி குறிகளா யிருக்கின்றன. இவ்வெண்ணங்களின் சேர்க்கையால் புதிய எண்ணம் ஒன்றும் அமைபவில்லை. முன்னமே தெரிந்திருந்த குணங்களைத்தான் கூட்டியுங் கழித்தும் பெருக்கியும் வகுத்தும் கணக்கிட்டுப் பார்க்கின்றோம். இதனில் நம் மனத்தின் செயல் ஒன்றுமில்லை. எண்ணங்களின் சம்பந்தத்தால் எய்திய முடிவை ஏற்கின்ற நிலையிலிருக்கின்றது மனம், அவ்வளவே. பகுத்தறிவென்பதன் இலக்கணம் இது.

இனிப் பொம்மையொன்றைக் கைக்கொண்ட சிறு குழந்தையின் செய்தியைப் பார்ப்போம். இது மண்ணோ, மரமோ, பொன்னோ, வெள்ளியோ, எனப் பொருளை வேறுவேறாகப் பிரிக்கப் புகுகின்றதில்லை. தஞ்சையிற் செய்ததோ புதுவையிற் செய்ததோ, என்று இட வேற்றுமையும், பழையதோ புதியதோ எனக் கால வேற்றுமையும் பாராட்டும் எண்ணங்கள் பிறப்பதில்லை. "இது வோர் பதுமை,—அழகியது—இதை ஒருபோதும் கையைவிட்டுக் கீழே இறக்கப் படாது—இதனைக் கொணர்ந்து தந்த தந்தை நல்லவன்—இதனைத் தம்பிக்குக்காட்ட வேண்டும்—" என்றிப்படிப்பட்ட எண்ணங்கள் அக்குழந்தை மனத்தில் பிறக்கின்றன. இவ்வெண்ணங்கள் தனித்தனியாக நிற்கும்போதும் அவைகளால் அக்குழந்தைக்கு ஒரு பயன் உண்டு. அதுதான் உவகை. மற்று அவைகள் ஒன்றோடொன்று சேரும்போதும், முன்னைய உதாரணத்தில் காட்டியதுபோல் முடிவு என்பது நேர்வதில்லை—அப்பொழுதும் உவகை என்னும் பயனே. இக்குழந்தை மனம் அப்பொம்மையின் தன்மையைப் பற்றித் தனக்குத் தெரிந்திருப்பனவற்றையெல்லாம் இப்பொழுது கணக்கிடப் புகுவதில்லை. பிறந்த ஒவ்வோர் எண்ணத்திற்கும் உள்ள சம்பந்தம் என்னவென்று ஆராய்வதில்லை. இது பதுமை என்ற எண்ணம்பிறந்தவுடன் அதுவரையிலே தனக்கு ஓர்உவகை உண்டாவதை உணர்கின்றது. தம்பிக்குக் காட்ட வேண்டும் என்ற எண்ணந் தோன்றியவுடன் உவகை உண்டாவதை உணர்கின்றது. தந்தை நல்லவன் என்ற எண்ணம் உண்டானவுடனும் தனக்கு உவகை உண்டாவதை உணர்கின்றது. இவ்வுவகை இருக்க, குழந்தையானது பொம்மையைப் பற்றிய தன்மையைத் தொடர்ந்த எண்ணங்களோடு நின்றுவிடுவதில்லை. வெகுவிரைவில் தன் மனத்தைக் கொண்டுபோய் அவ்வெண்ணங்களோடு கலந்துவிடுகின்றது. தன்னுடைய அன்னை தனக்குப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிப் பாராட்டியபோதெல்லாம் அக்குழந்தை ஒருவித இன்ப உணர்ச்சியை அறியப் பெற்றிருக்கின்றது. ஆதலின் அக்குழந்தை மனம் அன்னையின் அன்பினால் ஒருவித உணர்ச்சிக்கு ஆளாகின்ற வண்ணத்தது. இவ்வண்ணத்தைக்கொண்டுபோய் அவ்வெண்ணங்களோடு, அக்குழந்தையின் மனோபாவம் கலந்துவைக்கும். இக்கலவையால் வேறுபல எண்ணங்கள் உடனே நேர்வதாகும். "இப்பொம்மைக்குப் பாலூட்டவேண்டும், அதனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டவேண்டும், அதன்மேல் காற்றடிக்கப்படாது, தூங்கவைக்கவேண்டும், ஒருவரும் இரையப்படாது" என்பனபோன்ற எண்ணங்கள் இக்குழந்தையின் மனத்தின்கண் தோன்றலாகின்றன. தோன்றி, அப்பொம்மைக்கு முற்றாத தனது அம்மம் கொடுக்கும், கூடாத தன் குதலையால் தாலாட்டும், காகிதத்தை எடுத்துப்போர்த்தும், பேசுவோர் வாயெல்லாம் தன் தளிர்க்கரங்களால் பொத்திப்பொத்தி ஒலியை அடக்கும். இது மனோபாவம்.

இவ்வாறு செய்கின்ற குழந்தையின் செய்தியை நுணுகி ஆராயுங்காலையில் ஒன்று தென்படும். இப்பொம்மையின் குணகுணங்களைப் பற்றிய எண்ணம் ஒன்றும் இப்போது அதனிடத்தில் இல்லை. தான் பாலூட்டிச் சீராட்டும் அது பொம்மை என்னும் ஒரு உருவமாக இருக்கவேண்டுமென்பதும் மிகையே. ஒரு உருவமுமற்ற மரக்கட்டையா யிருந்தாலும் போதும். சிறுமணை, தலையணை முதலியவைகளுங்கூட அதன் பாராட்டலுக்குப் பாத்திரமாகின்றன. உருவமற்றவோர் மரத்துண்டை வைத்துக்கொண்டு, தன்வெறுங் கையே சங்காகப் பால்போட்டும். கட்டைக்கு இல்லாத உருவமும், வாயும் கையிலில்லாத சங்கும்பாலும் எல்லாம் அக்குழந்தையின் மனோபாவம் பூர்த்தி செய்து வைக்கின்றது. புள்ளாங்குழலினிற்குள் புக்க காற்று அக்காற்றிற்கேற்ற வெறும்சுவரமாகவே வெளிவருவதுபோல், இக்குழந்தையுள் புகுந்த எண்ணம் அவ்வெண்ணத்திற்கேற்ற எண்ணங்களாக மாத்திரம் வருவதில்லை. பொம்மையைப் பார்த்த நமக்குள், 'அது மண்' 'புதுச்சேரியில் செய்தது' என்ற எண்ணங்கள் செல்ல, அவ்வெண்ணங்களின் தொடர்ச்சிக்கு ஏற்றபடியே மீண்டும் 'எட்டணா விலை' என்று அவை வெளிவருகின்றன. புள்ளாங்குழலை வாசிப்பவன் தான் ஊதுங் காற்றோடு தன்னுடைய உணர்ச்சியையுங் கலப்பானாயின் அக்காற்று வெறும் சுவரங்களாய் நில்லாமல் கீதமாகிக் கமகத்துடன் வருகின்றது. புள்ளாங்குழலை வாசிப்பவன் ஊதிய காற்றை எப்படி ஆள்கின்றானோ, அவ்விதமே எண்ணங்களை மனோபாவம் ஆள்கின்றது. புள்ளாங்குழற் புலவன், "இப்பொழுது ஸா சுவரம் பிறந்தது, இப்பொழுது ரீ சுவரம் பிறந்தது, இப்பொழுது கா சுவரம் பிறந்தது, இப்பொழுது பா சுவரம் பிறந்தது, இப்பொழுது தா சுவரம் பிறந்தது," என்று அவன் தனித்துத் தனித்து இயக்குவதில்லை. இப்படிப் பிறந்ததால் இதன் முடிவு மோகனராகம் என்றுஎண்ணுவதில்லை. இந்தச் சுவரங்கள் தனித்தனிச் சுத்தமாயமைவதாலே சுகம் என்னும் பயன் ஏற்படுகின்றதா; இவைகளைச் சேர்க்கும்படி சேர்ப்பதால் விளைகின்ற மோகன இராகமென்னும் இன்பமாகிய பயன் எய்துகின்றதா, என்பதே அவனுடைய உணர்ச்சியின்நிலை. இக்கீதமானது சுவரங்களின் சேர்க்கையால் ஆனதுதான். ஆனாலச் சுவரங்கள் மாத்திரமல்லாது அதனைச் சேர்த்தவனாகிய புலவனுங் கலந்திருக்கின்றான். மனோபாவம் என்னும் அது புரியும்தொழில் இப்புலவன் போன்றதே. ஏற்பட்ட எண்ணங்களைப் பல்வேறுவகையில்ஒழுங்குபடுத்தி அதனுடன் தானுங் கலந்துகொண்டு அவ்வெண்ணங்களின் சேர்க்கையால் வேறுபிற எண்ணங்களும், அவைகளுக்கு ஒரு பயனும் உண்டாமாறு மனோபாவம் செய்கின்றது. பகுத்தறிவு, எண்ணங்களின் சம்பந்தத்தைமட்டுங் குறித்து அச்சம்பந்தத்தால் கணிதநூல் முறைப்படி எய்தவல்ல முடிவினில் கொண்டு சேர்க்கும். மனோபாவம் அவ்வெண்

ணங்களைத் தன்னுடைய தன்மையனவாக்கி அவைகளால் வரும் பயனைத்தான் ஆதரிக்கும் எண்ணங்களுக்குக் காரணமாயிருந்தபொருள் அல்லது விஷயத்தைப் பகுத்தறிவு முக்கியமாகக்கொண்டு அதனையே பற்றியிருக்கும். மனோபாவம் அப்பொருளால் பிறந்த எண்ணங்களிலிருந்து விளைந்த பிறஎண்ணங்களில் உணர்ச்சியைப் பற்றிக்கொண்டு அப்பொருளைப்புறக்கணித்துவிடும் தன்மையது.

சென்றவாரம் நாம் சுருங்கக்கூறிக் குறித்த விஷயங்களையே இங்குச் சிறிது விரித்துரைக்கலாயினோம். பின் இனி, கவிதையின் வாய்மை இன்னதென்றும், கல்சர்நிலை எய்துவிப்பதற்குக் கவிதை எவ்விதத்தில் உதவுகின்றதென்பதையும்பற்றி இனிச் சொல்வதற்கிருப்பவைகளை உய்த்து அறிவதற்கு மனோபாவம், பகுத்தறிவு என்னும் இவைகளின் இலக்கணம் தெள்ளிதின் தேர்ந்திருத்தல் இன்றியமையாதது. ஆதலின் இவை சிந்தனையில் அமர்ந்திருத்தல் வேண்டும். ஒவ்வொருவரிடத்தும் ஓரளவு பகுத்தறிவும் ஓரளவு மனோபாவமும் இருக்கின்றன—எப்பாகம் அதிகம் என்பதிலேயே வேற்றுமை தோன்றுகிறது. அவரவர் தமது எண்ணங்களை எடுத்தாய்ந்து, எவையெவை பகுத்தறிவின்பாற் பட்டனவென்றும், எவையெவை மனோபாவத்தால் இயங்குவன என்றும் சோதித்துச் சிறிது பயிற்சிசெய்தல் நலம்.

OF THE REG… MADR

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

காண்டவ தகனச் சருக்கம்.

வேய்ங்குழலி னின்னிசைக் குளமுருகி மெய்ம்மறக்குந் தங்கள் வாழ்க்கையே யானந்தமய வாழ்க்கையென வுலகுக் கறிவிக்கு மசுணப் புட்கள், அவ்வனத்தில் வெடித்தெழுந்த சடில வோசையால் மாய்ந்தன.

584பக்கத் தொடர்ச்சி

அனைய போதிலவ் விபினசா
லங்களி னூர்தருக் களினீண்ட
சினைக டோறும்வாழ் சிகாவள
கலாபமேற் செறிதரு தீச்சோதி
பனையி னீளுடற் பணிகளை
யலகினாற் பற்றலிற் படர்பந்திப்
புனையு மாமணி நிழல்பரந்
தெழுந்தெனப் பொலிந்திலங் கினமாதோ

[அப்போதந்த வனக்கூட்டத்தில் பொருந்திய மரங்களின் நீண்ட கிளைகளிலெல்லாம் வாழ்கின்ற மயிற்றோகைகளில் பொருந்தியதீச்சோதி, பனைபோல்நீண்ட உடல்களையுடைய பாம்புகளை மூக்கினாற் பிடித்தலால் ஒழுங்காய் நின்ற அவைகளின் தலைகளிலுள்ள மணிகளின் ஒளியே பரந்ததுபோலும் பிரகாசித்தது.]

கவி, மயில்களிடம் பற்றிய தீக்கு உவமைகூறுவான்றொடங்கி அம்மயில்களே பற்றித் தூக்கிய பன்னக மணிகள் நிரல்படப் பொலிந்த தோற்றத்திற் கொப்புமை கூறினார் தோகை பற்றியெரிதலாற் சேய்மைக்கணின்று நோக்குவார்க்கு மயிலினுருவம் தென்படுமாதலா லன்னார் அம்மஞ்ஞைகள் அலகாற் குத்தித் தூக்கிய வரவின் மணியொளியோ வென வயிர்க்க விடமுண்டு. உரோமாபுரி நாட்டையாண்ட நீரோவென்னு மரசன் இசைக்கருவியில் பெரிதும் வல்லவன். தன்னூர் முழுவதும் தீப்பட் டெரிந்தபோது, அக்கண்கொளாக் காட்சியைக் கண்டவக் கோமான், பிடிலென்னும் இசைக்கருவியை யெடுத்துக் குன்றமீதேறி யின்னிசை யெழுப்பிக் குனித்தானும். பீலி பற்றியெரியுங் காட்சி, கவிக்கும் நமக்கு முவமைகாட்டிக் களிக்க வேதுவாயிற்று; மயூரத்தின் மனநிலையுணரத் தரமோ? வேலைசூழ் வையகத்து மாந்தர்க் கேமாப்பளிப்பது யாவர்க்கு முவகை யளிக்குமென்பதில்லையே. ஒருவற் கின்னல்தருவதே மற்றையொருவற்கு மதர்ப்பை யளிப்பதென்பதையும், உலகியலில் பெரும்பாலோர்தம் தாழ்மையாலேயே சிறுபான்மையோர் ஏற்றமடைகிறா ரென்பதையும், இருவர் ஒருபரிசிலைப் பெறவிரும்பி நாடின், அது ஒருவற்குக் கிட்டினால் மற்றையவனுக் கஃதில்லையாதலால் அவனழுங்கலேதான் முதலாமவன் உவகைகூரவேண்டி யிருக்கிறானென்பதையும், மனித ரெண்ணுவரேல், வெற்றியின் பயனாகச் செய்யும் பெருமிதச் சேட்டைகள் உலகி லிலவாகு மன்றோ? முதலிரண் டடிகளில் செறிதரு வடமொழிகள் நாம் முற்கூறிவந்த கட்டுரைகளை விளக்கும்.

ஆசு கன்றனோ டடவியை
வளைத்தன னசுசுக் கணிமேன்மேல்
வீசு கின்றன புலிங்கசா
லமும்புகல் வேறெமக் கிலதென்று
பாசி ளங்கிளி பூவைகள்
வெருவிமெய் பதைத்துளந் தடுமாறிப்
பேசு கின்றசொற் கேட்டலு
நடுங்கின பிறபற வைகளெல்லாம்.

[வாயுவைத் துணையாகக்கொண்டு கானகத்தை வளைத்தான் அக்கினி; "தீப்பொறிக் கூட்டங்களும் மேலும்மேலும் வீசுகின்றன, இனி நமக்குப் புகல் வேறிலது" என்று பச்சிளங் கிளிகளும் நாகணவாய்ப் புட்களும் அஞ்சி உடல் பதைத்து மனந்தடுமாறிப் பேசுகின்ற பேச்சைக்கேட்டு மற்றைய பறவைகளெல்லாம் நடுங்கின]

உயரமாயும் நெடுந்தூரமும் பறந்துசெல்ல முடியாத மயில் முதலிய பக்ஷிகள்தா மிறந்தனவெனின், வேறு பறவைகள் பறந்துய்ந்து ஏன் போகவில்லை யென்பார்க்குக் கவி காரணங் காட்டுகின்றார். வன்னி வாயுவைத் துணையாக் கொண்டுவிட்டான். பறக்கமுயலுங் குருகுகள் வாயுவேகத்தால் மேலெழும்ப முடியாமற் கீழ்நோக்கி வீழ்கின்றன. அவைகள் கீழ்நோக்கத் தீப்பொறிகள் மேல்நோக்கி யவைகளைப் பற்றுகின்றன. ஆதலால் பறவைகட்குப் புகலிடம் வேறில்லையென்று அரற்றின. கிளிகளும் நாகணவாய்ப்புட்களும், பூவைகளும் குயில்களுமாம் பேசுந்திறமைவாய்ந்தபுள்ளினங்கள் புகன்ற மொழிகளைக்கேட்ட பிறபறவைக ளஞ்சி

நடுங்கின. பாசிளங்கிளிக ளென்னவே, பச்சைக்கிளி பச்சைக்குழவி யென்பதுபோ லிளமையை யுணர்த்திச் சிறகிள்ளைகளும் நாகிளம் பூவைகளும் வெருவிப் பிதற்றிய பேச்சைக்கேட்டுப் பிறபறவைகள் நடுங்கிப் பறந்துசெல்லும் விசைமொழிந்தன, வாயழிந்தன, வென்றும் குறிப்பித்தார்போலு மாசிரியர்.

ஆசுகன், ஆசுசுக்கணி, புலிங்கசாலம் ஆகிய வடமொழிகளையும், வடமொழித் தொடர்களையு முபயோகிப்பதால் லாட்டின் முதலிய மொழிகளின் ஒலிக் குறிப்பால் மில்டனென்னும் ஆங்கிலக்கவி தன் னூலை யலங்கரித்ததுபோல், நமது வில்லியின் செய்யுளும் சற்றே முடுக்கடைந்து பொற்புறுகின்றது.

[ஆசுசுக்கணி - விரைவில் ஈரத்தை வற்றச்செய்யும் விருப்புடையவன்]

முன்னிரண் டடிகளில் பறவைகளின் பேச்சு நம்முன் நிகழ்வதேபோல் கவி, சம்பாஷணைமுகத்தாற் பாடியிருப்பது குறிக்கொளத் தக்கது.

'முப்புரத்தை முக்கணன் முனிந்தநாண் மூவரம் முழுத் தீயிற்' றப்பினுரெனினும், காண்டவமெரித்த நாள் தப்பின ரெவருளர்? ஒருவரும் தப்புதற் கிசையின்றி வனமுழுவதையும் வன்னி விழுங்கினன். சடுலவாரவத்தாற் செவிகளும் செவிடுபட்டன. குறித்த காலத்திற் றேன்றி, நியமித்த காலத்தில் அத்தமனமாகும் ஆதித்தனைப்போல், இரதமேற்கொண்டு கிரீடியும் கிருஷ்ணனும் கானகத்தைச் சூழ வந்தார்கள்.

முந்திவார் சிலைக்கைப் பற்குனன் றொடுத்த
முரணுடை மூரிவெங் கணைக
ளுந்திவா ளுரகர் சூடிகா மகுட
கோடிக ளுடைத்தலி னுடைந்து
சிந்திமீ தெழுந்த மணிகளு மனலின்
சிகைகளிற் றெறித்தெழு பொறியு
மிந்திரா லயத்துக் கேற்றிய தீப
மென்னநின் றிலங்கின வெங்கும்

[முற்பட்டு,வரிக்கட்டுக ளமைந்த வில்லைக் கையிலுடைய பார்த்தன் தொடுத்த வலிவுடைய பெருமை பொருந்திய கணைகள் தள்ளிப் பாம்புகளின் உச்சியிலுள்ள தலையினணிகளை யுடைத்துத் தள்ளுதலால், உடைபட்டுச் சிந்தி மேலெழுந்த மாணிக்கங்களும்,நெருப்பினுச்சியினின்று தெறித்துக் கிளம்பிய அனற்பொறியும், இந்திரன் கோயிலுக்கேற்றிய தீபம்போல் விளங்கின]

தேயு தன்தாவகம் புகுந்துண்பதை மேனின்று கண்டான் இந்திரன். அவன் நிற்குமிடமே யாலயமாயமைய, அண்டத்தையளாவி வானுறவோங்கியவொளியும் பொறியு மக்கோயிலுக் கேற்றிய தீபமென்னப் பொலிந்தன.

இந்திர விழவெடுத்தல் முற்காலத்திய வழக்கமாயிருந்ததாதலால் இது இந்திரவிழவில் நேர்ந்தவோர் செய்கைபோலும். அவ்வொளியே தேவர்கோனுக்கு வனத்தி னிலையைத் தெரிவித்தது. அக்கோலத்தைக் கண்ட வலாரி மிக்க தளர்வுற்று, தன் நண்பனை தக்கன் அழிவானென வழுங்கி, அவனைத் தேட அயிராவதமிவர்ந்து, புயல்களனைத்தையுமேவித் தீயை யவித்திட அருகிருந்த வானவர்க்கு ஆணையிட்டான்.

ஏவக விருத்தச் செவ்வியின் றனுவுக்
கேற்றநாண் முருக்கிவிட் டென்னச்
சேவக விமையோ ரெண்டிசா முகத்துஞ்
செஞ்சுடர் வாள்விதிர்த் தென்னப்
பாவகன் பகுவாய் நாவிதிர்த் தென்னப்
பரந்தவப் பாவகற் குணவாந்
தாவக முழுதும் வளைந்துகொண் டெழுந்த
சலதர சஞ்சல சாலம்.

[பாணத்தைத் தன்னகத்தேயுடைய இந்திர வில்லிற்குத் தகுந்த கயிற்றைத் திரித்து விடுத்தாற்போலவும், இந்திரனுக்குச் சேவகஞ் செய்யும் இமையோர் கூட்டம் எட்டுத் திக்குகளிலும் சுடர்விடு ஒள்வா ளசைத்தாற்போலவும், அக்னி தன் பெருவாயிலுள்ள ஏழுநாக்குகளு மசைந்தாற்போலவும்,சுற்றிய அவனுக் குணவாகிய வனம்முழுவதும் வளைந்து கொண்டெழுந்தன மேகத்திலுண்டான மின்னற் கூட்டங்கள்]

வானவில்லைப் பலவகையில் உவமைகூறுவதில் வில்லிக்கு விருப்பமுண்டென்று முன்னரேயே எடுத்துக் கூறியுள்ளோம். ஒவ்வொரு முறையும் நவீன வழியில் ஆசிரியர் அதனை யுவமையாகக் கொண்டுள்ளார். கரும்புவில்லிற்குச் சுரும்புநா ணனைதுபோல், இந்திர வில்லிற்குச் சுந்திர மின்னல் நாணாயிற்று. அவ்வில்லும் உருமெனு மம்பைத் தன்னகத்தே யுடையது. ஏ அகம் ஏவகமென்க. ஏ—அம்பு. விருத்தச்செவ்வி யென்றது இந்திரனை. பெரியோர்களிடத்துக் கேட்பவன் என்றுவது, பெரியோர்களால் கேட்கப்படுபவனென்றுவது பொருள்படும். சலதரம், நீரைத் தன்னகத்தே தரித்திருக்கும் மேகத்தைக் குறிக்கும். சஞ்சலம் மின்னலென்க. மின்னல் வானவில்லிற்கு ஏற்ற நாண்போலவும், இமையவர் வாளொளி போலவும், அக்கினியின் சுவாலைபோலவும், நாற்புறமும் சூழ்ந்து நுடங்கி விதிர்த்தது. அம் மின்னலைப் பின்தொடர்ந்து போந்த இடியின் பேரொலி, இந்திர னேறிய களிறு பிளிறு நீடொலியையும், அவன் வில்லினு ணொலியையும், இமையவர் கோபத்தாற்கனன் றுநக்க நகையொலியையும் மறைத்தோங்கியது. காளமுகில்கள் ஒருசேரக் கூடிப் பெருமழை பொழிந்தன.

எக்கட லினு மினிப்பசை யிலதென்
றேழிரு புவனமு நடுங்கத்
தொக்கட லுருமோ டெழுமெழு கொண்டற்
சோனையஞ் சுருவையான் முகந்து
மைக்கடல் வெளுக்கக் கறுத்தமெய்ம் மகவான்
வழங்கிய வாகுதி யனைத்து
நெய்க்கடல் சொரிந்த தென்னுமா றருந்தி
நீடுவான் முகடுற நிமிர்ந்தான்.

[எந்தக்கடலினு மினி நீர்ப்பசை யிலதென்று பதினன்கு வுலகத் துள்ளவரும் நடுங்க, வலிமைபொருந்திய இடியோடு சேர்ந்தெழுந்த ஏழுமேகங்களாகிய அழகிய நெய்த்துடுப்பால் மொண்டு, கருத்த கடலும் வெளுக்கும்படி, கரிய மெய்யையுடைய இந்திரன்வழங்கிய நீராகுதிகளையெல்லாம், நெய்க்கடல் சொரிந்ததென்னும்படி உட்கொண்டு வானத்தினுச்சிவரை அக்கினியும் நிமிர்ந்தோங்கினன்.]

உணவைமட்டுமே நெடுநேரமுண்ட அக்கினிக்கடவுளுக்கு நீர்விடா யேற்பட்டிருந்தபடியால், இந்திரன் பொழிந்த மழைத்தாரைகள் அவன் நீர் நசையையொழித்தனவேயன்றிய க்கனலை அவித்திடவில்லை. தன் தாகந் தீரப்பெற்ற அங்கியும் முன்னினும் ஓங்கிவளர்ந்தான். உவரியின் நீரை மொண்டுகொண் டெழுந்து மேகஞ் செல்லுதலால் எழுகடலிலுள்ள நீரும் வற்றிப் போய்விடுமென வுலகத்திலுள்ளார் வெருவினர். புணரியின் நீரே புகைந்து முகிலாதல் ரசாயன சாத்திரப்

பிரமாணம். சோனைமேகமே சுருவையாக, இந்திரன் ஆழிநீரை அள்ளிச் சொரிந்தது அக்கினிக்கு நெய்க்கடல் சொரிந்தது போலிருந்தது. ஏனெனில் பாலை நிலத்திலுள்ள வெல்லாப் பொருளையும் அவன் வாய் மடுத்தலால் அவனுக்குப் பைம்புனல்வேட்கை மிஞ்சியது. மைக்கடல் வெளுத்தது. தாரையின் வேகத்தாலுண்டான நுரையாலும், நதிகளின் பலவகைப்பட்ட நிறத்தையுடைய நீர்ப்பெருக்காலும் காண்டவவனமே ஓமகுண்டமாகவும், அவணெழும் நெருப்பே முத்தீயாகவும், தாரைகளே ஆகுதியாகவும், சோனையே சுருவையாகவும், உருமொலியே வேதவொலியாகவும் உவமைகளை யமைத்துக் காண்க.

சிந்தாமணி நீதிச் செய்யுள்

[591 பக்கத் தொடர்ச்சி]

காதிவேன் மன்னர் தங்கள்
கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேற் சேற றேற்றாய்
நெறியலா நெறியைச் சேர்ந்து
கோதியல் காம மென்னும்
மதுவினிற் குளித்த ஞான்றே
போதிய பொறியற் றாயோ
ரரும்பொறி புனைவி யென்றான்

[வேல் மன்னருக்குக் கண் எனக் கூறப்பட்ட நீதியின் நெறியில் படர்தல்விடுத்து நெறியல்லா நெறியினைச்சேர்ந்து காமமென்ற கள்ளிலே மூழ்கியபோதே நல்வினை அற்றாய், ஆகவே ஓர் இயந்திரத்தைச் செய்வி என்றான்]

இது சச்சந்தனுக்கு நல்லறிவெனும் அமைச்சன் கூறுமொழியாகும். நீதியே அரசர்க்குக் கண்ணாகும் என்ற குறிப்பினைக் காண்க. நீதியைக் கண்ணெனக் கூறுவானேன்? கண்ணை மற்ற உறுப்புகளினும் உயர்ந்ததாகக் கொள்கின்றனர் மக்கள். கண்ணிலாதான் அறிவுப் பெருக்க மடைதல் அரிது. புறக்கண்ணும் அகக்கண்ணும் சேரும்பொழுது மனிதன் தனது அறிவினை வளரச் செய்கின்றான். கண்ணிலாதான் எவ்வாறு இயற்கையழகுகளைக் கண்டுகளிப்பன். இயலாதன்றே! இயற்கையழகினை நோக்கநோக்க மனிதஅறிவு விரிவடைகின்றது. அவ்வறிவு விரிவான் அவன் வேளாண்மை செய்தற்குரிய னவன். அன்பே அறிவு என்ற கருத்து ஈண்டு கருதற்பாற்று. இத்தகைய கண்ணனைய நீதியிலாதான் மக்கட்குப் பெருநன்மை விளைத்தல் இயலாது. பின்னர் யாது செய்வன்? பெருந்தீமையே. முறைசெயாத மன்னவன் செயல்கள் மக்கட்குக் கண்ணிலாமையான் எய்துதற்பாலதாய்த் துன்பங்களை நிகர்க்கும். முறைகோடிச் செய்கின்ற செயல்கள் பின்னர் அரசனையே பொருந்துவதாகும்.

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

[அரசனது கொடுங்கோன்மையான் குடிகள் அல்லலுற்று அதனை ஆற்றாது அழுதல்னுைய கண்ணீரன்றே அவ்வரசனது செல்வத்தைத் தேய்க்கும் படை]

என்ற வள்ளுவர் பொன்னுரை காண்க. "நீதிமேற் சேறல் தேற்றாய்" என வடிக்கண் மன்னன் முறை கோடினன் என்ற குறிப்பு மிளிர்தல் காண்க. இவ்வரசன் எத்தகைய தீநெறி பற்றினன் என்ற கடா எழல் கூடும்.

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கென்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில் [ஞான்றும்

[கருமஞ் செயற்கு வேண்டும் துணிவினையும் செல்வத்தையும் உடையானாகிய வேந்தற்குப் பெண்ணைச் சேர்தலினால் உண்டாய பேதைமை இல்லையாம்]

எனத் தேவரும் கூறினாரன்றே! இவ்விலக்கணத்தைச் சச்சந்தன்மாட்டுக் காண்டலரிதாயிற்று. ஆயின் சச்சந்தன் குடிகட்கு யாதேனுமோ றிடையூறு செய்தானோ எனின் அதுவும் செய்திலன். பெண்ணின் இன்பமே பெரிதெனக் கருதி அரசு நடாத்துவானாயின் அதனால் பெருந்தீங்கு விளையுமென்பது உய்த்துணர்பாற்று. இந்நீதியை, தான் செய்யப்போகும் செயலால் குடிகட்குக் குறைவுண்டாகுமெனக் கருதியே அரசினை வேறொருவனுக்கு விட்டான்.

காதி வேல்வல கட்டியங் காரனும்
நீதி யானிலங் கொண்டபின் னீதிநூ
லோதி னார்தமை வேறுகொண் டோதினன்
கோது செய்குறைக் கோதினுட் கோதனன்.

[வேலைவல்ல கட்டியங்காரனும் நீதியால் அரசன் கொடுத்த நிலத்தைக் கொண்டபின் அறநூற் பெரியார்களைத் தனக்கு வேறாகக் கருதி ஒருசொல் கூறினன்]

"நீதியால் நிலங்கொடுத்தான்" என்றதில் சச்சந்தன் கட்டியங்காரனிடத்து அரசினை விதிக்கும்பொழுது நீதிமுறையான் விதித்தான். அஞ்ஞான்று கட்டியங்காரனது வெளித்தோற்றம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதும் உட்கோள் எவ்வாறிருந்திருக்கும் என்பதும் உன்னற்பாலதாம். இவனது வஞ்ச மனத்தையும் தீக்குணங்களையும் மிக்க நயம்பெற ஆசிரியர் கூறுகின்றார்.

"கோதுசெய் குணக் கோதினுட்கோதனன்"—இதற்குப் "பயனற்றதாகக் கொள்ளப்பெறும் பல கோதுகளுள் செய்நன்றியை மறத்தலாகிய கேடுடையவன்" எனப் பொருள் கொள்க. இவ்வாறு ஆசிரியர் தங்கூற்று யமைத்தற்குக் காரணம் அடுத்த பாட்டில் காட்டப் பெறுகின்றமை காண்க.

மன்ன வன்பகை யாயதோர் மாதெய்வ
மென்னை வந்திடங் கொண்ட திராப்பகற்
றுன்னி நின்று செகுத்திடு நீயெனு
மென்னை யான்செய்வ கூறுமின் என்னவே

[மன்னவனுக்குப் பகையாயதொரு தெய்வமானது என்னை யணுகி அவனைக் கொல்வாய் எனக் கூறுகிற்கும். இதற்கு யான் யாதுசெய்வேன், கூறுவீராக.]

தேவர், கவிகளை முன்னுக்குப்பின் முரணின்றி அமைத்த பான்மையினை நேர்ந்துழிக் காட்டுவல். இச்சொற்களைக் கேட்ட தருமதத்தன், அமைச்சன் மதி அழியுமாறு நாகத்தின்மீது இடியேறுவிழுந்ததொப்ப வருந்திக் கூறும் நீதியுரைகள் கவனித்தற் பாலதாயமைந்துள்ளமை காண்க.

தன்னை யாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வெளவிற் பிறழ்ந்திடும் பூமக
ளன்ன வன்வழிச் செல்லினிம் மண்மிசைப்
பின்னைத் தன்குலம் பேர்க்குந ரில்லையே.

[தன்னை உயர்த்திய அரசனைப் பின்பு கொல்பவனுவான் பெருஞ் செல்வமும் மாறிவிடும் அவ்வரசனது வழியிலே செல்லின் தன் உயர்குலத்தைப் பேர்ப்பார் இம்மண்மிசை யாருமில் லென்க]

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

[பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் உய்ந்நெறி யுண்டு. செய்ந்நன்றியினைக் கொன்றானுக்கு அத்தகைய உய்ந்நெறி இல்லையாம்]

இத்திருக்குற ளுண்மையினைத் தருமதத்தன் சச்சந்தற்கு எடுத்துக் காட்டுகின்றான். 'செய்ந்நன்றி கொல்லன்மின்' என்ற சிலப்பதிகார உரையுங்காண்க.

குலசேகரர்.

[587 வது பக்கத் தொடர்ச்சி]

பேயாழ்வார்

நூலினே ரிடையார் திறத்தே நிற்கு
ஞாலந் தன்னொடுங் கூடுவ தில்லையான்
ஆலியா வழையா வரங்கா வென்று
மாலெழுந் தொழிந்தே னென்றன்மா லுக்கே 2.

[நூலின்நேர் - நூலைப்போன்ற, இடையார் - இடையினை உடைய பெண்கள், திறத்தே - விஷயத்தை அல்லது உறுப்பிலே, ஆலியா - கூத்தாடி;]

அரங்கன்.

"ஆடவரும் பெண்ணைப் அணையவிரும்பும் அழகிற்கோர் அழகான ஆணழகனும் அரங்கன்; பெருமைக்கே பெருமைதரும் பெரியோனைப் பெரிய கோவிலில் வாழ்பவன்; அன்பும் அன்புகொள்ளும் அன்பன் ; அன்பரை நாடி அரங்கத்தே வாழ்பவன்.

என்றன் மாலுக்கே

பெருமையும் பேரன்பும் பேரழகுமே ஒருவடிவானவன் எனக்கு எளிவந்து என்மீது மால்கொண்டான். சிற்றின்பச்சிறு துளிகளாகியமங்கையர்வலிய அணைத்தபோது தம்மைமறந்து தனிநிலை யடைகின்றனர் மக்கள். பேரின்பப் பெருங்கடலே மேல்விழுந்து தழுவினால் யான் என்னாவேன். தழுவும் இடமோ காதற்குறிப்புக் கரைகடந்து பொங்கும் களியரங்கம். ஆற்றிடைக்குறையின் நாற்புறமும் பொன்னியாறு சூழ்ந்து வணங்கி ஓடித் திரைக்கையால் குளிரிளந்தென்றலை மணத்தோடுமணந்து எங்கும்பரவி இன்பமுற வேண்டி இருள் குடிபுகுந்த பெரும் பொழில்களில் விரும்பிப் புகுந்து நீர்த்துளிகளை இன்பத்துளிகளாக வீழ்த்தி அழகுசெய் தின்பமூட்டி உயிரைவளர்க்கின்றது. பலநிறப் பறவைகள் பண்பல பாடுவதும், பேடைகள் களிக்க ஆடுவதும், தேன் துளிக்கும் சிறு மலரும் வண்டுபாடும் பெருமலரும் உள்ளூறிய மணத்தோடே வெளிப்பகட்டாம் நிறம் பலவுங்கொண்டு விளக்கென எரிவதுவும், கண்டோர் நெஞ்சத்தே களிப்பூட்டிக்குடிகொள்கின்றன. களவியலாகிய அத்தகைய இடத்தே அத்தகையவனே, அவ்வாறு மேல்விழுந்தபோது அடியனேன், எவ்வாறாவேன் ?

ஆலியா அழையா

தலைகீழாகக் கூத்தாடுகின்றேன். அவனோடு கூடி நிற்பதையும் மறந்து அவனழகையும் அன்பையும் எண்ணிக் கன்றுள்ளிக் கனைக்கும் கற்றாவே போல, அரங்கா அரங்கா என அடைவுகெடக் கூப்பிட்டு வாய்வெருவாநின்றேன். இங்ஙனம் பித்தனாகின்றேன்.

மாலெழுந்தொழிந்தேன்

அவனழகு இருந்தபடி என்னே! என்னே! ஒவ்வோர் அணுவிலும் அமைந்துகிடக்கும் அழகினை ஓரணு அளவிலேனும் முற்றமுடியக் கண்டு துய்த்தலாவதோ? அரங்கத்தே கல்லளவிற் குடிபுகுந்த அழகினையேனும் கண்டுணர்தல் ஆவதோ?

நூலினேரிடையார் திறத்தே

இவ்வாறு பித்தேறிநிற்கின்ற நான் உலகத்தவரோடு கூடுவதில்லை. கூடுவதெங்ஙனம் கூடும். அனைத்துமாய அழகிற்கழகனைக் கண்ட கண், வேறொருவிடத்தும் அவன் அழகினையன்றி வேறொன்றாகண்டு மக்களது அழகெனமயங்குவதுண்டோ? மங்கையர் அழகினைக் காணினும் அன்னவன் அழகெனக்கொண்டுதொழுது வணங்கி மணவாளன் திறத்தே நிற்பேன்; அழகினை உள்நின்ற ஆண்டவனின் ஒளிவடிவெனக் கொண்டு தொழாது மங்கையர் உடலின் வளமென எண்ணி அவர்களது மயக்கவலையில் சிக்குவார் உலகினர். நூலினும் நுண்ணிதாய இடையுடைய பெண்களது அழகின் நுட்பம் அவர் அறியார். அவர்கள் பெண்ணெனும் கடவுளின் பேரன்புநிலையை அறியாது காதற்கழிவிடமென எண்ணி அவர்கள் இடையையே எண்ணி நிற்பர். பெண்களிடத்தே இறைவன் திறமாகிய அறிவு விளக்காம் அழகும் உண்டு; இதுகொண்டு நம்மை அவர்கள் இறைவனோடு சேர்த்தல் கூடும். மக்கள்திறமாகிய ஊனும்என்பும் உண்டு; இவைகொண்டு நமது ஊனையுருக்கிச் சுடுகாட்டென்பாக்கவும் கூடும். இறைவன் திறத்து ஏரெழிலை வழிபடாது பெண்கள் திறத்து உறுப்பினை ஒவ்வொன்றாக வழிபடுகின்றனரே: அந்தோ அவர்கள் வழிபடுவது என்புந் தோலுமேயன்றோ! சிறிதூன்றி நோக்கினால் அழகு சுரக்கும் அறிவூற்றும் இறைவன் திறத்தினை அங்குங்கண்டு இன்பவெள்ளத் தழுந்தலாகுமே! இறைவனழகு எல்லையிலா திருத்தல்கண்டு அவனழகில் ஈடுபடுவதுபோல ஊனுருவாகிய இப்பெண்கள் உறுப்பே அழகிற்கு இருப்பிடம் எனவெண்ணி அவ்வுடனலன் முடிவிலாததெனக்கொண்டு ஈடுபடுகின்றனரே! காவலனும் கணவனுமாய்க் கலந்துநின்ற இறைவனைக் கண்டு காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டுரைத்தகடியகாதலால், அழகுமுழுதும் ஒருங்கே காணப்பெறாது அவன் உறுப்பில் ஒவ்வொன்றிலேயே மனம் பதிந்துநின்று "அரங்கத்தம்மான் திருக்கமல பாதங்கள் வந்தென் கண்ணினுள்ள வொக்கின்றதே',

என்றும், "அரங்கத்தம்மான் அரைச்சிவந்த வாடையின்மேற் சென்றதாம்என்சிந்தனையே" என்றும், 'அந்திபோல்நிறத்தாடையும் அதன்மேல் அயனைப் படைத்ததோரெழில் உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே' என்றும், 'திருவயிற் றுதரபந்தன மென்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே' என்றும் 'திருவார மார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே' என்றும் 'செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை நுகர்வதுவே' என்றும் "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே" என்றும், 'கோலமாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில் நீலமேனி ஐயோ நிறைகொண்டதென் னெஞ்சினையே' 'என்றும் என்னமுதனைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்றும் பாடுகின்றனர் அடியார்கள். 'கூத்தனிற்கூத்து வல்லாருளரோ என்றன் கோல் வளைக்கே" என்று இறைவனே காதலனாகவும் உயிரே காதலியாகவும் கலந்த நிலையில்,

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே.

என்று, வேண்டி இறைவனை அடைந்து கண்டு "நட்டம் என்று வந்தாயெனும் எம்பெருமான் திருக்குறிப்பே"என்றதிருக்குறிப்பின்வழியோடி'அரனடல் கண்டால் பீளையுடைக் கண்களாற் பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்னே' என அவன் அழகினை அடிமுதல் காணத்தொடங்கி, ஓரழகு கண்டால் வேறழகு காணமுடியாதபடியால் ஒவ்வோருறுப்பாய்க் கண்டின்புறத் தொடங்கித் "திருவடியைக் கண்டகண் கொண்டு மற்றினிக் காண்பதென்னே"என்றும் 'உடுத்ததுகில் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே " என்றும், "உந்தியின்மேலசைத்த கச்சினழகு கண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே " என்றும், "கைந்நின்ற ஆடல் கண்டாற் பின் கண்கொண்டு காண்பதென்னே" என்றும், 'வானத்தவருய்ய வன்னஞ்சையுண்ட கண்டத்திலங்கும் ஏனத்தெயிறு கண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே" என்றும், 'சிரித்தமுகங் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" என்றும் 'நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே, என்றும் 'முத்தும் வயிரமும் மாணிக்கந்தன்னுள் விளங்கிய தூமத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே' என்றும் பாடி, அடிமுதல் முடிவரை கண்டபின்னர் முடிந்த முடிபாகிய திண்கழலையே எண்ணி 'நெருங்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு காண்பதென்னே' எனத் திருவடியழகில் ஈடுபட்டு இன்புறலாகின்றனர் இறைவன் அடியார். இறைவனுடைய எல்லையில்லாத எழிலைக் கண்டபோதுதான் இவ்வாறு அழகு முழுதும் காணாது ஒவ்வோர் நிலையைக் கண்டின்புறுவது கூடுவதாகின்றது. "தோள்கண்டார் தோளே கண்டார், தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளே கண்டார், தடக்கைகண்டாரு மஃதே, வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார், ஊழ் கொண்ட சமயத்தன்னா னுருவு கண்டாரை ஒத்தார்" என்பது இறைவனுக்கே ஏற்றதாகும். இந்நிலையைப் பெண்களிடத்தும் கண்டதுபோலப் பேயாய் அலைந்து ஒரு உறுப்பினை நுகரப்புகுந்தால் மற்றோர் உறுப்பில் போகமாட்டாதவராய் நிற்கின்றனர் இவ்வுலகினர். கண்ணழகு காணவும் வாழ்நாள் போதாதென்பார்; ஏரெழில்பகர பலநூறுவாயுடைய பாம்பரசனாலும் முடியாதென்பர்; மங்கையின் ஒரு சிறுபல்லழகை முற்றுங்காணல் பலநூறு கண்ணுடைய வானவர் தலைவனுக்கும் இயலாதென்று புகழ்வர். இவ்வாறு பெண்கள் திறத்தேயே இவர்கள் நிற்கின்றனரே!

நிற்கும்

பெண்களோடு கூடினாலும் பெருநிலையினை அடைய முயலுதல் வேண்டும். மாதரை வாழ்க்கைத்துணையாகக்கொண்டு அன்பினைப்பெருக்கி உயர்நிலையடைந்து உய்ந்துபோதல் வேண்டும். இவ்வாறு பெண்ணிலையினின்றும் உயரச் சென்றியங்காது பெண்களிடத்தேயே உயிரற்றபிணம்போலச் செயலற்று நின்று விடுகின்றனரே இவ்வுலகினர். தண்ணீர் பலஇடங்களில் புகுந்து பாய்ந்தாலும் மேலும்மேலும் ஓடிக்கொண்டேயிருக்குமானால் மாசெலாம் நீங்கித் தூயதாகின்றது. ஓரிடத்தேயே தேங்கிநிற்குமானால் புழுத்துப் போகின்றது. மாதரோடுநிற்றல் ஒரு நிலை; அஃதொரு வழியேயாகும். அதற்குமேலும் செல்லவன்றோ அஃதொரு வழியாகிறது. போகும் ஊரை மறந்து வழியிலேயே நின்றவனை என் என்பது. மேற்சென்று உழைக்காதபோது உடலம் புழுப்பதன்றி உயிரும் புழுத்துப் போகின்றது.

அம் மாதரேனும் இறைவனைப்போல நம்மேல் விழுந்து காதலிக்கின்றனரோ? அன்பெல்லாம் ஒருதலையே உள்ளது. நூலினே ரிடையாரோடு கலத்தலாகிய களவின்பம் கடவுள் வடிவினதாகலாம். ஆனால் உலகினர் தாம் அவர்கள் திறத்தே நிற்கின்றனர். அவர்கள் இவர்கள் திறத்தே நிற்றலுண்டே யன்றிக் கூடுதலும் கலத்தலும் இல்லை. இல்லாதபோது இன்பம் ஏது?

ஞாலந் தன்னோடும்

இத்தகையது இந்த ஞாலம். ஞாலம் என்றால் ஞான்று வெள்ளிடையே தொங்குவது என்பது பொருள். விலங்குநிலைக்கும் இறைவன்நிலைக்கும் இடையே தொங்குவதே மக்கள் வாழும் உலகம். உடலை நோக்கின் கீழே விழுவோம். அழகோடு அறிவை நோக்கின் மேலேறுவோம் ; இறைவனோடு சேருவோம். இடைநின்ற தொங்கலாட்டப் பிழைப்பில் எத்துணைநாள் இருப்பது.

கூறுவதில்லை யான்

இவ்வாழ்வு வாழ்வாரோடு சேரின், நீரின் மூழ்கியவர்கள் பிடிக்க வருவாரையும் நீரில் அழுத்தி விடுதல்போல நம்மையும் விலங்குகளில் அழுத்திவிடுவர். ஆதலின் அவர்களோடு யான் கூடிக் குலாவுவது இல்லை.

மாறன் பாப் பாவினம்.

[592 பக்கத் தொடர்ச்சி]

பரிபாடல்

தரவு.

கதமெரி கால்கண் ணெதிர்நிழல் சீறு
மதமலை நூலின் முதன்மொழி கூறந்
திதமத னுலன் றதனுயிர் பேணுந்
திருமகள் கேள்வன் கருணை விநோத
னடலர வெனவுல குயிர்தொழ வளர்தரு
வடமலை யதனிடை பலமலர் பூத்த
பூங்கொடி மானு மாதர்வடி வணைத்து
மாங்கமை வானீடு கிழியுட் படவெழுதி
யீங்கெதிர் வேனென் றனிர்.

இது, வெண்டளையும், மாசிரியத்தளையு வஞ்சித்தளையும் விரவியொன்பதடித்தாய் ஈற்றயலடியு மீற்றடியும்வெண்டளைத்தாய் நாற்சீரு முச்சீருமா யிற்ற தரவு.

தரவு.

கருங்கட லுடுத்த கண்ணகன் ஞால
மொருங்ககப் படுத்திரு ளொளித்திடக் கதிர்விரித்
தொருதனித் திகிரி யுரனுடை யூர்திப்
பருதியங் கடவு ளலம்வரும் பரும
வொண்மொன் மால்வரை யொன்றல விரண்டென
வெண்கொளப் புடைத் திணைத்திறு மாந்து
வளரிள வனமுலை வடிவினை யெழுதினும்
புளகமுற் றடிக்கடி புடைப்பதை யெழுதலு
யேந்தெழில் வள்ளைத் தண்டினை யெழுதினும்
வாய்ந்தபொன் னூசலின் மறுகுவ தெழுதலுங்
காந்தளை யெழுதினுங் கதிர்வளை யுழல்வது
மேய்ந்துட னொலிப்பது மெழுதுவ தரிதா
லுழுவலன் பிடைநின் றாட்டிய வின்பக்
கெழுதகைக் கேளி ரின்னுங் கேண்மின்

இது, ஆசிரியத்தளையானு மியற்சீர் வெண்டளையானும் பதினலடித்தாய் வந்த தரவு.

அம்போதரங்கம்.

அரிமத ருண்கண் ணெழுதினு மருண்மருள்
புரிவன வகைவகை பொறிப்பது மரிதே.
குமிழினை யெழுதினுங் குணனு குறிப்புயிர்ப்
புமிழ்திற மெழுதலு முணர்வுற வரிதே.

இவை, இரண்டு மீரடி யிரண் டம்போதரங்கம்.

அம்போதரங்தம்

இதழமு துதவலு மெழுதுவ தரிதே
புதன்முனி வுறநெறி புதுமையு மரிதே.

இவை யிரண்டு மோரடி யிரண் டம்போதரங்கம்-

அராகம்.

பதநட முறவணி பரிபுர மொலியுற
விதமுறத் தேமொழி பெழுதுவ தெவரே.

இது, எண்சீரான் வந்த தனி யராகம்.

என விவை, (தனிச்சொல்)

சுரிதகம்.

எழுதிய கிழியொன் றளவெனி லின்பம்
பழுது படாதல் கல்கொடு பயிலு
மன்றிலின் கூட்ட. மகற்றலு நின்பாற்
பொன்றலி லருள்புறம் போம்வகை துடங்கி
வன்றொழி லாடவர் மகிழ்ந்தயல் போதரப்
பூளையு மெருக்கும் புனைதா ராக
வேலைமுன் படர்த்தவன் வெண்ணீ றணிந்து
பனைமடல் பாய்மா வாகப்
புனைமணி மாட வீதி போதுகவே.

இது, ஒன்பதடியான் வந்திற்ற நேரிசையாசிரியச் சுரிதகம். பகுதி - மடல். துறை - எழுத வரிதென்றல். 5.

பரிபாடல் முற்றிற்று.

மாறன் பாப் பாவினமு
முற்றிற்று.

குறிப்பு:—இதனோடு 'மாறன்பாப் பாவினம்' முற்றுகின்றது. மளிகைமேடு ஸ்ரீமான் நாராயணரெட்டிகாரு உதவிய கையெழுத்துப்பிரதி ஒன்றையே கொண்டு இதனை நாம் பதிப்பிக்க நேர்ந்ததால் வழுக்கள் பல இருப்பது இயற்கையே. சிற்சில விடங்களில் செய்யுளிற்கும் அதனடியில் கண்டுள இலக்கணக்குறிப்பிற்குங்கூடப் பொருத்தமின்மை புலப்பட்டதெனினும் ஒப்பு நோக்குதற்கு வேறு பிரதியொன்றும் இல்லாமல் எம்முடைய ஊகமே கொண்டு திருத்திவிடல் முறையன்றென, இருக்குமாறே பதிப்பித்துளோம். இருக்குமளவிலும் இந்நூலினை மேலினி ஆராய விரும்புவோர்க்கு இப்பதிப்பு ஒரு சிறிது உதவுதல் கூடும். இந்நூலின்கண் காதற்சுவையும் பக்திச்சுவையும் கலந்து திகழ்கின்ற செய்யுள்கள்பல. வகுத்துள இலக்கணத்திற்கு இலக்கியம் அமைக்கும் முறையில் இந்நூல் பாடப்பெற்றுளதெனினும் இலக்கண நினைவு இன்றியேயும் பொருள்கருதி அனுபவிப்பதற்கியன்ற தன்மைத்தாம். பரிபாடல்கள் ஐந்தும் பெரிதும் பாராட்டத்தக்கன. இடமணித்தெனக் கூறும் நயத்தில் இவைகளை வென்றுள வேறுபாக்கள் வெகு சில. சிறிதுகாலத்தில் இந்நூல் தனக்குரிய தானத்தை எய்துமென மதிக்கின்றோம். ஆசிரியர்

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா

வி. பி. சார்ஜ் வேறு. **கலாநிலயம், வேப்பேரி, சென்னை.**

அப்பர்

5. அப்பர் கவித்திறம்.

1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

[590 வது பக்கத் தொடர்ச்சி]

(iv) **வித்தாரம் – பொதுவிலக்கணம்.**

திருநாவுக்கரசு நாயனர் எத்துணை யளவையில் வித்தாரகவியென விளம்பலாகு மென்பதைச் சிறிது ஆராய்வோம்:—

விஸ்தார கவியிலக்கணம் தொல்காப்பியனாரும்

"முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்'' என

அகலக்கவியைச் சொன்முடிபு கூறுமுகத்தாற் கூறினர். இதன்றியும் புறத்திணைக்கண்,

"தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்றப் பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமுஞ்
சிறந்த நாளணி செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்
நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபு
மாணர்ச் சுட்டிய வாண்மங் கலமு
மண்ணெயி லழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவள னேத்தி
நடைவயிற் றோன்று மிருவகை விடையு
மச்சமு முவகையு மெச்ச மின்ற
நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட
ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்
கால மூன்றொடு கண்ணிய வருமே'' என

அகலக்கவியை விதந்து கூறுதலானும், வித்தார கவியிலக்கணம் திட்பநுட்பமுள்ள சூத்திரத்தால் வரையறுத்தல் கடினமாயிருக்கின்றது. ஆயினும் அக்கவி அடிபல நடக்கும் தனிப்பாவாய் ஆற்றுப்படைகள் போலிருப்பனவும் உள; தொடர்நிலை செய்யுட்களாயிருப்பனவும் உள. அப்பர் தேவாரம், வித்தார கவிப் பகுதிகளிரண்டினுள் தொடர்நிலையைச் சார்ந்ததென்னலாம் *. இத்தேவாரத்தில் அகலக்கவிக்கு இன்றியமையாச் சிறப்பாகிய தச பொருத்தமும் ஆங்காங்கு நன்கு விளங்குகின்றன. அவையாவன:—

" மங்கலம் சொற்பால் வருண முண்டி
தானமக் கரநா டப்பாக் கதிகண
மான வீரைந்து மம்முதற் சீர்க்குப்
பொருத்த மென்னத் தெரித்தனர் புலவர்'' †

அவற்றுள் மங்கலத்தின் இலக்கணமாவது:–

" சீர்,பொன், பூ,மணி திங்கள் பரிதி
கார்,திரு வெழுத்துக் கங்கை யானை
கடனிலை மாவுலகஞ் சொன் னீர்தே
ரமுதம் புகழ்சில மாரணம் கடவுள்
திகிரி பிறவுஞ் செப்புமங் கலமே''‡ என்பதா

முதற்கண்நின்ற மங்கலமொழி இவையென்பாம்
சீர் முதலாகத் திகிரீறாக நின்ற இருபத்திநான்
சொல்லும் அவைபோல்வன பிறவும் அகலகவிக்
முதற்கணிற்கும் மங்கலச் சொற்களாம். "பிற'' என்
தனல், வாழி, மாலை, சங்கு, தார், விசும்பு, கவி, கய
சுடர், முரசு, கவரி, தோகை, நன்று, தாமரை, வி
க்கு, மலர், பழனம், இடபம் என்பனவும்; சீர்த்தி
கீர்த்தி, ஞாயிறு, புயல், புனல், வேழம், களிறு, பரி
மதியம், தீபம் முதலிய பரியாயச் சொற்களு
கொள்க. இவை முறையே திருநாவுக்கரசு நாயனு
தேவாரச் செய்யுட்களிற் காண்க:—

சீர்:—

சீரார் புனற்கெடில வீரட் டமுந்
திருக்காட் டுப்பள்ளி திருவெண் காடும்
பாரார் பரவுஞ்சீர் பைஞ்ஞீ லியும்
பந்தணை நல்லூரும் பாசூர் நல்ல
நீரார் நிறைவயல்சூழ் நின்றி யூரு [லுட
நெடுங்களமு நெல்வெண்ணெய் நெல்வாய்
காரார் கமழ்கொன்றைத் தாரார்க் கென்றுங்
கடவூரில் வீரட்டங் காப்புக் களே.
காப்புத் திருத்தாண்டகம் 9.

* பொன்:—

பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின்னுள் ளத்திரள் வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்தருள் கொண்டிரு ணீங்குதல்
என்னுள் ளத்துள தெந்தைபி ரானிரே.
மனத்தொகை - திருக்குறுந்தொகை 1.

பூ:—

பூவ னூர்ப்புனி தன்றிரு நாமந்தான்
நாவி னூறுநூ றுயிர நண்ணினர்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே
திருப்பூவனூர்-திருக்குறுந்தொகை 1.

பூமே லானும் பூமகள் தேவனும்
நாமே தேவரெ னமை நடுக்குறத்
தீமே வும்முரு வாதிரு வேகம்பர்
ஆமோ வல்லற் படவடி யோங்களே
—திருவேகம்பம் - திருக்குறுந்தொகை. 1

---

*"தொடர்நிலை விகற்பங் கடையில வென்ப''
இலக்கணவிளக்கம் 768.

† இலக்கணவிளக்கம்-770.

‡ ஷை 771

* பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யு
மென்னாவி காப்பதற் கிச்சையுண்
டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்
மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே
திருத்தூங்கானைமாடம்-திருவிருத்தம்-1.

மணி:—

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனூ ராதிரைநாளா லதுவண்ணம்

திருவாரூர்-திருவாதிரைத் திருப்பதிகம்-1.

கனகமா வயிரமுந்து மாமணிக் கயிலைகண்டும்
உனகனு யரக்கனோடி யெடுத்தலு முமையாளஞ்ச
அனகனுப் நின்றவீச னூன்றலு மலறிவீழ்ந்தான்
மனகனு யூன்றினேன் மறித்துநோக்கில்லையன்றே

ஸ்ரீகயிலாயம்-திருநேரிசை-1.

திங்கள்:—

சந்திரனை மாகங்கை திரையான் மோதச்
சடாமகுடத் திருத்துமே சாமவேத
கந்தருவம் விரும்புமே கபால மேந்து
கையனே மெய்யனே கனக மேனிப்
பந்தணவு மெல்விரலாள் பாக னாமே
பசுவேறு மேபரம யோகி யாமே
யைந்தலைய மாசுணங்கொண் டரையார்க் கும்மே
யவனாகி லதிகைவீ ரட்டனாரே.

திரு அதிகைவீரட்டானம்- அடையாளத்திருத்தாண்டகம் 1.

பரிதி:—

பரிதி யானைப் பல்வேறு சமயங்கள்
கருதி யானைக் கண்டார் மனமேவிய
பிரிதி யானைப் பிறரறி யாததோர்
சுருதி யானைக் கண்டீர் தொழற்பாலதே

தொழர்பாலதே என்னுந் திருக்குறுந்தொகை 5.

கார்:—

மஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய்
நெஞ்சுளே புகுந்துநின்று நினைதரு நிகழ்வினானே
துஞ்சும்போ தாகவந்து துணையெனக் காகிநின்று
மஞ்சலென் றருளவேண்டு மாவடுதுறையு ளானே

திரு ஆவடுதுறை-திருநேரிசை 1.

திரு:—

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
வுருவேயென் னுறவேயென் னூனே யூனின்
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளேநின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையு மமரரேறே

திரு ஆவடுதுறை-திருத்தாண்டகம் 1.

திருவி னாதனுஞ் செம்மலர் மேலுறை
யுருவ னாயுல கத்தினுயிர்க் கெலாங்
கருவ னாகி முளைத்தவன் கானூரிற்
பரம னாய பரஞ்சுடர் காண்மினே.

திருக்கானூர்-திருக்குறுந்தொகை 1.

எழுத்து:—

இதற்கு ஆதாரமாவன உயிர்த்தல், ஓசை, ஒலி சொல். இவையன்றி எழுத்து நிலைக்காதாதலால் எழுத்து * அதன் மூலாதாரங்களால் அப்பர் தேவாரத்தில் முதற்சீரில் எடுக்கப்பட்டமை காண்க:—

(i) உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுரு வெழுதி
யுயிரா வணஞ்செய்திட் டுன்கை தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
யயிரா வணமேறு தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூ ராண்ட
வயிரா வணமேயென் னம்மா னேநின்
னருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே

திருவாரூர் திருத்தாணடகம் 1.

(ii) ஓசை யொலியெலா மானாய் நீயே
யுலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

திருவையாறு-திருத்தாண்டகம் 1.

(iii) சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
யல்லானைப் பகலானை யரியான் றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்து
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே.

திருநாரையூர்-திருத்தாண்டகம் 1.

[திருநாவுக்கரசுநாயனார் எழுதும் தொழிலை மொழியுங்கால ஓவியக்கலையே குறிக்கின்றனர்.]

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
றொழுது போகநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே

தனித் திருக்குறுந்தொகை 8.

கங்கை:— *

வெள்ளத்தைச் சடையுள்வைத்த வேதகீ தன்றன்பாத
மெள்ளத்தா னடையவேண்டின் மெய்தரு ஞானத் [தீயாற்
கள்ளத்தைக் கழியநின்றார் காயத்துக் கலந்துநின்று
உள்ளத்து ளொளியுமாகு மொற்றியூ ருடையகோவே

திருஒற்றியூர்-திருநேரிசை 1.

ஆறு சடைக்கணிவ ரங்கைத் தீய
ரழகர் படையுடைய ரம்பொற் றோண்மே
னீறு தடவந் திடப மேறி
நித்தம் பலிகொள்வர் மொய்த்த பூதம்
கூறுங் குணமுடையர் கோவ ணத்தார்
கோடால வேடத்தர் கொள்கை சொல்லில்
ஈறு நடுவு முதலு மாவா
ரிடைமருது மேவி யிடங்கொண் டாரே

திருவிடைமருது-திருத்தாண்டகம் 1.

அலையார் புனற்கங்கை நங்கை காண
வம்பலத்தி லருநட்ட மாடி வேடந்
தொலையாத வென்றியார் நின்றி யூரு
நெடுங்களமு மேவி விடையை மேல்கொண்
டிலையார் படைகையி லேந்தி யெங்கு
மிமையவரு முமையவளு மிறைஞ்சி யேத்த

* எண்ணு மெழுத்துங் குறியு மறிபவர் தாமொழியப்
பண்ணி னிசைமொழி பாடிய வானவர் தாம்பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்றிரு வேதிகுடி
நண்ண வரிய வமுதினை நாமடைந் தாடுதுமே.

திருவேதிகுடி-திருவிருத்தம் 6.

மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமே மன்னி னாரே

திருவலஞ்சுழி-திருத்தாண்டகம் 1.

யானை.—

வேழம் பத்தைவர் வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழம் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன் பூரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே.

திருக்கோழம்பம்-திருக்குறுந்தொகை 1

*கங்கையைச் சடையுள்வைத்தார் கதிர்பொறியரவம் வைத் [தார்
திங்களைத் திகழவைத்தார் திசைதிசை தொழவும்வைத்தார்
மங்கையைப் பாகம்வைத்தார் மான்மறி மழுவும்வைத்தார்
அங்கையு ளனலும்வைத்தார் ஐயனை யாறனாரே

திருவையாறு-திருநேரிசை 1.

தமிழ்ப் பாடம் 83.

189066

[நளவெண்பா]

[586-வது பக்கத் தொடர்ச்சி]

திருவேங்கடமாலை

இனிச் சிலேடைகள் அமைத்துப்பாடிய செய்யுள்கள் சிலகற்போம். ஒருசொல், அல்லது ஒருவகையாய் நின்ற சொற்றொடர், பல பொருள்கள்பட்டுச் செய்யுளின் கருத்திற்குப்பொருந்தும்படி அமைத்துப் பாடுவது சிலேடையணி. மதி என்பதற்குச் சந்திரன் என்றும் புத்தி என்றும் இரண்டு பொருள்கள் இருக்கின்றன. இவ்விரண்டு பொருள்களும் ஒருங்கே அமையும்படிப் பாடக்கூடும். "கலைகள்பலசேர்ந்த மதியைமருட்டும் அவள் முகம்" என்றக்கால், கிரணங்கள் நிறைந்த பூரண சந்திரனும் இவள் முகத்தின் பிரகாசத்திற்குத் தோற்று ஓடிப்போகும் என்பது ஒரு பொருள். கல்வி பல கற்றிருக்கின்றவர்களுடைய புத்தியும் தடுமாறும்படி செய்யும் அழகுடையது அவள் முகம், என்பது மற்றப்பொருள். கலை என்பதற்கும் கிரணம் என்றும் கல்வியென்றும் இரண்டு பொருள்களிருப்பதால் கலை மதி, என்பது கிரணங்களுடைய சந்திரன் என்று ஒரு பொருளும், கல்வி நிறைந்த புத்தி என மறு பொருளும் பெறும். இவ்விரண்டு பொருளும்பொருந்தும்படி ஒருத்தியினுடைய முகம் வருணிக்கப்பட்டிருக்கின்றது. இது சிலேடை. உயிர்போகுந்தருணத்திலிருந்த ஒரு கிழவிக்கு அருகிலிருந்தவர் சிலர் அழுக்குத்துணியில் பாலைத்தோய்த்து வாயில் விட்டுக் கொண்டிருக்க அவள் வேண்டாமென்று விலக்கியது கண்டு அவர், "பாட்டி, உனக்குப் பாலும் கசந்ததோ" என்று பரிந்தபோது அக்கிழவி, "பாலும் கசக்கவில்லை, அதை வார்க்கும் துணியும் கசக்கவில்லை" என்று கூறினாளெனச் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதுவும் சிலேடை. கசக்கல் என்பதற்குத் துணியைக் கசக்கி அழுக்கு நீக்குதல் என்ற அர்த்தமும், வாய்க்குக் கசப்பாக இருத்தல் என்ற அர்த்தமும், ஆகிய இரண்டு அர்த்தங்களும் இங்கே பொருந்தியிருத்தலால், இது சிலேடைஅணி ஆயிற்று.

இச்சிலேடை இருவகைப்படும். ஒரு சொல்லேனும் சொற்றொடரேனும் இருக்கும்படியே நின்று வேறுவேறு பொருள் தரலாம்; அல்லது ஒருவிதமாகப் பிரிந்து ஒரு பொருளும், மறுவிதமாகப் பிரிந்து வேறு பொருளும் தரக்கூடியதா யிருக்கலாம். "சூரியனும் வள்ளலாரும் தம் செம் கரங்களால் இரவு தீர்ப்பார்," இங்குச் செம், என்பதற்குச் சிவப்பு என்றும் நேர்மை என்றும்இரண்டு பொருள்களும், கரம் என்பதற்குக் கிரணம், கை என இரண்டு பொருள்களும்; இரவு என்பதற்கு, இராத்திரி பிச்சை என இருபொருள்களும் உள. ஆகையால் சூரியன் தன் சிவந்த கிரணங்களால் இராத்திரி காலத்தைப் போக்குவான் என்றும், வள்ளல் தன் நேர்மையான கைகளால் யாசகர்கள் மறுபடி பிச்சையெடுக்காதபடி அளவற்றபொருள் தருவான் என்றும் அவ்வாக்கியம் இரண்டு பொருள்பட நிற்கின்றது. இந்த இரண்டு பொருள் தருவதற்கும் அவ்வந்த வார்த்தைகள் அவ்வந்த உருவத்திலேயே நிற்கின்றன. வேறாகப் பிரியவில்லை. இப்படிப் பிரியாமல் நிற்கின்றநிலையிலேயே பலபொருள் தருகின்ற சிலேடைக்குச் செம்மொழிச் சிலேடை என்பது பெயர். மேலே சொன்ன, 'கலைமதி மருட்டும் முகத்தினாள்' என்னும் உதாரணமும், "பாலும் துணியும் கசக்கவில்லை" என்னும் உதாரணமும் செம்மொழிச் சிலேடைகளே.

இவ்வாறல்லாமல், சில சமயங்களில் ஒரு சொல்லை பிரிக்காமல் ஒரு பொருளும், பிரித்து மறுபொருளும் கொள்வதால் சிலேடை ஏற்படக்கூடியதா யிருக்கும். அல்லது, ஒருசொல்தொடரை ஒருவிதமாகப் பிரித்து ஒரு பொருளும் மறுவிதமாகப்பிரித்து வேறு பொருளும் கொள்ளவேண்டிவரும். இப்படி வருகின்ற சிலேடைகளுக்குப் பிரிமொழிச்சிலேடை எனப் பெயர்:— "குளத்திலும் காட்டிலும் தாமரை இருக்கும்," என்னுங்கால், குளத்தில் தாமரை (மலர்) இருக்கும் எனத் தாமரை என்பதைப் பிரிக்காமல் ஒரு சொல்லாகவும்; காட்டில் தாம்+மரை (தாவுகின்ற மான்) எனத்தாமரை என்பதை இரண்டு சொற்களாகப் பிரித்தும் வெவ்வேறு பொருள் கொள்ளவேண்டியிருத்தலால் இது பிரிமொழிச்சிலேடை ஆயிற்று. "குறத்தியரும் அரம்பையரும் கரும்பாம்பாட்டினார்" என்னுமிடத்தில் 'கரும்பாம்பாட்டினர்' என்று நிற்கின்ற சொற்கள் கரும்+பாம்பு+ஆட்டினர், என்றும், கரும்பு+ஆம்+பாட்டினர், என்றும் வெவ்வேறான மூன்று சொற்களாய் இருவகையில் பிரியக்கூடும். குறத்தியர், கரும் பாம்பு ஆட்டினர்=கருமையான பாம்புகளை எடுத்து ஆட்டினர்; அரம்பையர், கரும்பு ஆம் பாட்டினர்=கரும்புபோன்ற இனிமையான பாட்டை யுடையவர். இதுவும் பிரிமொழிச் சிலேடை.

இவ்விதமான சிலேடைகளை முதலிரண்டடியில் அமைத்து ஐம்பது பாடல்கள் பிள்ளைபெருமாள் ஐயங்கார் இந்தத் திருவேங்கடமாலையில் பாடியிருக்கின்றார். அவைகளிற் சிலவற்றைக் கற்போம்.

காதலிற்றுச் சார்தவர்க்குங் காமியத்தைச் சார்ந்த
[வர்க்கும்
வேதனைக்கூற் றைத்தவிர்க்கும் வேங்கடமே-போதக
மோதி மருப்பொசித்தார் முன்பதினு றுயிரவ [ர்த்தை
ரோதி மருப்பொசித்தா ரூர். 13.

பதப்பிரிவு.—காதல் இற்று சார் தவர்க்கும் காமியத்தை சார்ந்தவர்க்கும் வேதனை கூற்றை தவிர்க்கும் வேங்கடமே போதகத்தை மோதி மருப்பு ஒசித்தார் முன் பதின் ஆறு ஆயிரவர் ஓதி மரு பொசித்தார் ஊர்.

அன்வயம்:— காதல் இற்றுச் சார் தவர்க்கு வேதனைக் கூற்றைத் தவிர்க்கும் வேங்கடமே என்றும், காமியத்தைச் சார்ந்தவர்க்கும் வேதனைக்கூற்றைத் தவிர்க்கும் வேங்கடமே என்றும், 'வேதனைக்கூற்றை' என்று சிலேடையாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த இரண்டு சொற்களையும் இருமுறை வருவித்துக்கொண்டு பொருள் காணவேண்டும்.

பதவுரை.

காதல் - ஆசாபாசங்கள்
இற்று - நீங்கி
சார் - அடைகின்ற
தவர்க்கு - தவசிகளுக்கு
வேதனை - பிரம்மனையும்
கூற்றை - யமனையும்;
காமியத்தை - இஷ்டசித்திகளை
சார்ந்தவர்க்கும் - விரும்பினவர்களுக்கும்
வேதனை - துன்பத்தினுடைய
கூற்றை - வகைகளை;
தவிர்க்கும் - விலக்குகின்ற
வேங்கடமே - வேங்கடந்தான்,

போதகத்தை - (கம்சனால் ஏவப்பட்ட குவலயாபீடம் என்னும்) யானையை, மருப்பு - தந்தங்கள், ஒசித்தார் - ஒடித்தவரும்; முன் - முன்நாள், பதின் ஆறு ஆயிரவர் - பதினாறுயிர் கோபிகளது, ஓதி - கூந்தலினுள்ள, மரு - வாசனையை, புசித்தார் - அனுபவித்தவருமான திருமால் விரும்பும், ஊர் - ஊராகும்.

விரிவுரை:—பற்றெலாம் முற்றுந் துறந்த தவசிகளாய் வந்து தன்பால் சேர்ந்தவர்களுக்கு வேங்கடமலை வேதனையும் கூற்றையும் தவிர்க்கும். வேதன் என்பது பிரம்மன்; அவன் பிறப்பிற்குக் காரணமாயிருப்பவன். கூற்று, இறப்பிற்குக் காரணமாயிருக்கின்ற யமன். வேதனையும் கூற்றையும் தவிர்த்தலாவது, பிறப்பும் இறப்பும் அற்ற முத்திநிலை அளித்தல். வேதனை என்பது இங்கு ஐ விகுதிபெற்றிருக்கின்ற இரண்டாம் வேற்றுமை விரி. இனி, வேதனை, என்னுஞ் சொல்லிற்குத் துன்பம் என்ற பொருளும், கூற்றை என்பதற்குப் பாகத்தை அல்லது வகையை என்ற பொருளும் இருப்பதால், மனோபீஷ்டம் நிறைவேறவேண்டிக் காமியத்தைச் சார்ந்தவர்களாய் வருகின்றவர்க்கு வேதனைக்கூற்றைத் தவிர்த்தலாவது துன்பத்தினுடைய வகைகளை நீக்குதல். வேதனை என்பது இங்கு ஆறும் வேற்றுமைத்தொகை. கூறு, என்பது 'பாகம்' என்ற பொருளையுடையது. அது இரண்டாம் வேற்றுமை ஐ விகுதியை ஏற்றுக் கூற்றை என ஆயிற்று.

இவ்விதம் "வேதனைக்கூற்றை" என்பது இருவேறு பொருள்களில், காதல் இற்றவர்களுக்கும், காமியத்தைச் சார்ந்தவர்களுக்கும் தனித்தனி பொருந்தும்படி அமைந்திருப்பதால், இது சிலேடை. இரண்டு பொருளிற்கும் இவ்விரு சொற்களும் ஒரேவிதமாக நிற்கின்றன; வேறுவகையாய்ப் பிரியவில்லை, ஆகையால் இது செம்மொழிச் சிலேடை.

குறிப்பு:–பொசித்தார் + ஊர் = பொசித்தாரூர். இதனில் நிலைமொழியிறுதியில் ரகரமெய்யும், வருமொழி முதலில் ஊகார உயிரும் இருப்பதால் அம்மெய்யும் இவ்வுயிரும் சேர்ந்து ரூ என்றாயின.

கேள்வித் துறவோருங் கேடறவில் வாழ்வோரும்
வேள்விக் கினமாற்றும் வேங்கடமே—மூள்வித்து
முன்பா ரதமுடித்தார் மொய்வேந்தர் வந்தவிய
வன்பா ரதமுடித்தார் வாழ்வு. 14.

பதப்பிரிவு:—கேள்வி துறவோரும் கேடு அற இல் வாழ்வோரும் வேள் விக்கினம் மாற்றும்—வேள்விக்கு இனம் ஆற்றும்—வேங்கடமே மூள்வித்து முன்பு ஆ ரதம் முடி தார் மொய் வேந்தர் வந்து அவிய வல் பாரதம் முடித்தார் வாழ்வு.

பதவுரை.

கேள்வி - ஞானநூல் கேள்வி மிக்க
துறவோரும் - துறவிகளும்
வேள் - மன்மதனால் விளையும்
விக்கினம் - இடையூறுகளை
மாற்றும் - நீக்கிக்கொள்வதற்கிடமானதும்,
கேடு - தீமை
அற - இல்லாமல்
இல் - இல்லறத்தில்
வாழ்வோரும் - வாழ்கின்றவர்களும்
வேள்விக்கு - யாகங்களுக்கு
இனம் - தகுந்தவைகளை
ஆற்றும் - செய்வதற்கு இடமானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்

முன்பா - முற்காலத்தில், ரதம் - தேரையும், முடி - கிரீடத்தையும், தார் - மாலையையும், மொய் - வலிமையையும் உடைய, வேந்தர் - அரசர், வந்து - வந்து, அவிய - மடியும்படி, வல் - கொடிய, பாரதம் - பாரத யுத்தத்தை, மூள்வித்து - விளைவித்து, முடித்தார் - நிறைவேற்றியவராகிய திருமால், வாழ்வு - வாழ்கின்ற இடம்.

விரிவுரை:—துறவிகள் மனத்தைக் கலைத்து இடையூறு செய்பவன் மன்மதன். அந்த இடையூற்றை வேங்கடமலைக்கு வந்தால் நீக்கிக்கொள்ளலாம் என்பது, வேள் விக்கினம் மாற்றும் வேங்கடம், எனப்பிரிப்தால் வரும் பொருள். இல்லறம் நடத்துகின்றவர் தங்கள் கர்மாநுஷ்டானங்களைச் செய்வதற்கும் ஏற்றது என்னும் பொருள், 'வேள்விக்கு இனம் ஆற்றும்' எனப் பிரிப்பதால் வருகின்றது. இவ்விதம் இருவேறு வகையாகப் பிரிந்தே வெவ்வேறு பொருள் தரும்படி அமைந்திருப்பதால் "வேள்விக்கினமாற்றும்" என்பது பிரிமொழிச் சிலேடை.

இலக்கணம்.

மயில் + ஆடும் = மயிலாடும் என்பதுபோல் நிலைமொழிஇறுதியில் மெய்யெழுத்தும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் வருமானால் அவை இரண்டும் இயல்பாகப் புணர்ந்து உயிர்மெய் ஆகிவிடும் என்ற பொதுவிதியை முன்நாள் சொன்னோம். எனினும், இப் பொதுவிதிக்கு மாறாக விகாரப்பட்டும் ஒவ்வோர் சமயம் புணரலாம்.

வில் + எடுத்தான் = வில்லெடுத்தான். கண் + இமை = கண்ணிமை. பொன் + அணி = பொன்னணி. உள் + அழைத்தான் = உள்ளழைத்தான். இல் + அடைந்தான் = இல்லடைந்தான்.

இவ்வுதாரணங்களைப் பார்த்தால், நிலைமொழியிறுதியில்மெய்யும், வருமொழிமுதலில் உயிரும் முன்சொன்ன பொதுவிதிக்கு மாறாகப் புணர்ந்திருப்பது தெரியவரும். வில் + எடுத்தான், என்பது, முன் சொன்ன பொதுவிதிப்படி புணருமாயின் விலெடுத்தான், என்றாகவேண்டும்; அவ்வாறின்றி வில்லெடுத்தான் என்று ஆகியிருக்கின்றது. அவ்வாறே, பொன் + அணி, என்பது பொனணி என ஆகாமல் பொன்னணி என்றாயிற்று. அவ்வுதாரணங்களில் பிறவும் இவ்விதமே பொன் + அணி, என்பதில் ன் என்னும் ஈற்று மெய்யும், அ என்னும் முதலுயிரும் புணர்கையில், பொன்ன் + அணி, என ஈற்றுமெய் இரண்டாக விரிந்து பொன், என்னும் நிலைமொழியின் உருவம் மாறாது அப்படியேயிருக்க; விரிந்த மற்ற ன் என்னும் மெய்யின்மேல் வருமொழி முதலில் உள்ள உயிர் ஏறின, என்று ஆனதால், பொன்னணி என வரக் காண்கின்றோம். எனவே, நிலைமொழி யிறுதியிலுள்ள மெய்யெழுத்து இந்த உதாரணங்களில் இரண்டாக விரிகின்றது. பின், விரிந்துவந்த மெய்யின்மேல் முன்சொன்ன பொதுவிதியின்படி வருமொழி முதலிலுள்ள உயிர் ஏறுகின்றது. மற்ற உதாரணங்களிலும் இவ்விதமே நிலைமொழியிறுதிமெய் இரண்டாகவிரிந்து, ஒருமெய் அப்படியேயிருக்க, மற்றொரு மெய்யின்மேல் வருமொழி முதல்உயிர் ஏறிப் புணர்வதைக் காணலாம்.

இவ் வுதாரணங்களில், வில் கண் பொன் உள் இல், என்னும் நிலைமொழிகளெல்லாம், இரண்டெழுத்துச் சொற்களாகவும், அந்த இரண்டெழுத்தில் முதல் எழுத்துக் குறிலாகவும் இருக்கின்றன. இவ்விதம் இருக்கின்ற சொற்களின் ஈற்றுமெய் எப்பொழுதும் விரிந்தே, வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணரும். முதலெழுத்துக் குறிலாகஇல்லாது வேல், காண், மீன், தாள் என்பனபோல் நெடிலாக இருக்குமானால் மெய்விரியாது:—வேல் + எறிந்தான்-வேலெறிந்தான். காண் + என்றான் = காணென்றான். மீன் + ஓட்டம் = மீனோட்டம். தாள் + அறுத்தான் = தாளறுத்தான். நிலைமொழி இரண்டெழுத்திற்கு மேற்பட்டதாயிருக்குமாயினும் ஈற்றுமெய் விரியாது பொதுவிதியின்படி உயிரோடு புணரும்:—மகள் + இறங்கினாள் = மகளிறங்கினாள். வரால் + ஓடியது = வராலோடியது. கள்வன் + ஓடினான் = கள்வனோடினான்.

எனவே, தனிக்குறிலைச்சேர்ந்த மெய்யின்பின் உயிர்வந்தால் மாத்திரந்தான் அம்மெய் விரியும்:—

கல் + அழகு = கல்லழகு; நிலைமொழி இரண்டெழுத்துச் சொல்லாகி முதலெழுத்துக் குறிலுமாய் இருப்பதால் அதன் ஈற்றில் வந்த ல் என்னும் மெய்யெழுத்து வருமொழி முதலிலுள்ள அ என்னும் உயிரோடு புணரும்போது, அந்த ல் என்னும் எழுத்து இரண்டாக விரிந்து உயிரை ஏற்றுக்கொண்டது.

கால் + அழகு = காலழகு. நிலைமொழி இரண்டெழுத்ததாயிருந்தாலும், அதன் முதலெழுத்து நெடில் ஆகையால் ஈற்றுமெய் விரியவில்லை.

பகல் + அழகு = பகலழகு, நிலைமொழி இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களை உடையதாதலால் ஈற்றுமெய் விரியவில்லை.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

14. வரைக்காட்சிப் படலம்.

சிறியோர்க் கஞ்சுதல் சிறப்புடைத் தாமோ.

பொய்ம்மையும்வாய்மையிடத்தவதொண்ணுமோவென நங் கலாநிலயத்தி னாசிரியர்போன்றோர், தொன்றுதொட்டு வந்துள உரைகளை அயிர்த்து, வள்ளுவர் கருத்து வேறாதலுங் கூடுமென்று எண்ணுங்கால் கம்பர் அவ்வுரைகளை மருவி நின்றதும்; வெகுளியின் மிகுதியோ நீத்தார்க்கொரு பெருமை என நினைத்தற் கஞ்சுங்கால், வள்ளுவர்க்குரைகண்டோர் கொள்கைக்குத் தான் உடன்படாத் தன்மையைக் காட்டிவைத்தும்; ஈகையின் ஊதியம் புகழென்றுரைத்த பரிமேலழகர் கருத்தினின் றகன்று கம்பர், வாழ்க்கையின் அறிகுறி புகழெனக் குறிக்கும் மணக்குடவரோடு இசைந்து நடந்ததும்; மீண்டுமம் மணக்குடவர் தீவினையச்சமென்பதைத் தத்தம் மனநிலையாகக் கொள்ளாது பிறர்க்கு இன்னா புரிதலோடு வேற்றுமையறச் சேர்க்குமிடத்துக் கம்பர் தீவினை நயந்து செய்த தேவர்கோன் திறத்தைக் காட்டுமாற்றால், 'பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல்' என்றுரைத்த பரிமேலழகரது மொழிக்கிசைந்து நடந்ததும்; நோக்கம் எதுவேயாயினும், கொடுப்பதைத் தடுப்பது மாபெரும் பாவம் பாவமே என்றவொரு செய்தி வள்ளுவர் வாய்நின்று வாராதிருக்கக் கம்பர் அதனையுஞ் சேர்த்துக்கொண்டனரோவென்றெண்ணுதற் கிடந்தரும் மாவலியின் கூற்றையும், யாவுங் கண்டோம். இவைகளில், ஈற்றினிற் கூறியதொழிந்த மற்றவை, திருவள்ளுவர் அருளிய குறள்களில் அமைந்துள சொற்களுக்கு எப்பொருள் ஏற்பது சிறக்கும் எனக் கம்பர் ஆராய்ந்து தமது அறிவிற்கண்ட முடிவுபோல் தோன்றுந் தன்மையனவே யல்லாது நாயனார் வகுத்துள கொள்கையின் அமைதியையே கம்பர் அயிர்த்தனரென் றுரைக்கத்தக்கன வாகா. ஈவது விலக்குதலைப் பற்றிப் பகர்ந்த விடத்தும், வள்ளுவர் செப்பிய அழுக்காறுடன் மற்றவகைக் காரணங்களும் சேரவருகின்றனவேயன்றி ஈவது விலக்குதல் பாவமன்றென்றெனக் கம்பர் திருவள்ளுவரை மறுத்தபடியமைந்திலது. இனி, வள்ளுவர் கொள்கைக்குக் கம்பர் உடன்பட்டிலரென்று கருதற்கியைந்த செய்தியும் இந்நூலின்கண் ஓரிடத்துளது.

595 பக்கத் தொடர்ச்சி

"சிற்றினஞ் சேராமை" என்றோர் அதிகாரம் வகுத்துளர் திருவள்ளுவர். எனினும், விடருப் தூர்த்தரும்

நடரு முள்ளிட்ட குழுவிற் சேர்ந்ததால் ஒருவன் கெட்டான் என உலகியலில் வழங்கிவருஞ் சொல் லிற்கு உறுதி தருகின்றதோ இவ்வதிகாரம் என்று ஒருசிறிது ஐயுறவு எய்துதலுங் கூடும்.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 1.

[பெரியோர் தன்மை சிறிய இனத்தை அஞ்சும். சிறியோர் தன்மை அது சேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணிக்கொள்ளும்]

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. 2.

[தான் சேர்ந்த நிலத்தின் தன்மையாலே நீர் தன் தன்மை மாறி அந்நிலத்தின் தன்மையைப் பெறும். அதுபோல மனிதருக்குத் தாம் சேர்ந்த இனத்தின் இயல்பினால் அறிவும் தன் தன்மைதிரிந்து அந்த இனத்தின் தன்மையது ஆகும்]

மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல். 3.

[மாந்தருக்குப் பொதுவுணர்வு தம் மனம் காரணமாக உண்டாகும். இவன் இத்தன்மையன் என்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல் இனம் காரணமாக உண்டாகும்]

மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு. 4.

[அவ்விசேட உணர்வு, ஒருவனுக்கு மனத்திலே உண்டாவது போலத் தன்னைப் புலப்படுத்தி, அவன் சேர்ந்த இனத்தின்கண்ணே உளதாம்.-நம்மனத்தின்கண் உண்டாகின்ற உணவிற் கெல்லாம் மூலகாரணம் நாம் சேரும் இனந்தான்' என்பது இப்பாட்டின் கருத்து]

மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும். 5.

[மனம் தூயவனாவதும் செய்யுங் கருமங்கள் தூயவனாவதும் ஆகிய இரண்டு தன்மையும் ஒருவனுக்கு அவன் இனம் தூயவனா யிருத்தலைப்பற்றி வருவதாம்]

மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. 6.

[மனம் தூயரா யிருப்பவர்க்கு மக்கட்பேறு நன்றாகும். இனம் தூயராயிருப்பவர்க்கு நல்லதாகாத வினை ஒன்றுமே இல்லை]

மனநல மன்னுயிர்க் காக்க மினநலம்
எல்லாப் புகழுந் தரும். 7.

[நிலைபெற்ற உயிர்களுக்கு மனத்தினுடைய நன்மை செல்வத்தைக் கொடுக்கும். இனத்தினது நன்மை அதனோடு எல்லாப் புகழையுங் கொடுக்கும்]

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து. 8.

[முன்னை நல்வினையால் மனத்தின் நன்மை உடையராயினும், அது அமைந்தவர்க்கு இனநலம் வலிமையைத் தருவதாகும்]

மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து. 9.

[ஒருவனுக்கு மனநன்மையாலே மறுமை இன்பம் உண்டாகும். அதற்கு அந்தச் சிறப்பும் இனத்தின் நன்மையால் வலிமைபெறும்]

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில். 10.

[ஒருவனுக்கு நல்லோரினத்தைவிடச் சிறந்த துணையுமில்லை—தீய இனத்தைவிட மிகுந்த பகையுமில்லை]

இப்பத்துக் குறள்களையும் பொதுவுற நோக்குங்கால் நல்லினம்சேர்வதன் நன்மை பாராட்டப் பெற்றிருப்பது உணர்கின்றோமே யன்றிச் சிற்றினஞ் சேர்வதன் தீமையைப் பெரிதுங் கூறியிருக்கக் காண்கிலேம். சிறியோர் பெரியோரொடு இணங்கி இருப்பதால் அச்சிறியார்க்கு நலம் பல வாய்க்கும் என்ற கொள்கை ஏற்புடைத்து. ஆயினும், பெரியோர் சிறியோருடன் சேர்வதால் தீயராகிவிடுவார் என்னு மவ்வுரையை ஏற்பதன்முன் நெடிது அதனை நோக்கி ஆய்ந்துகொள்ளல் வேண்டும். சிறியோரை நோக்கி, "சிறியீர், நுமக்கு உறுதி நாடுவீராயின் பெரியோரைச் சேர்ந்து நலங்கொள்மின்" என ஒரு வாயில் விதித்துப் பின், அப்பெரியோரையும் நோக்கி, "பெரியீர், நுமது மேன்மை சிதைவுறாதிருத்தல் வேண்டுமாயின், சிறியாரை அஞ்சி நீர் அகலப்போமின்" என மறுவாயால் மறுப்பதனால் ஏது பயன்! பெரியாரெனப்படுவோர் சிறியோரைத் தம்முடன் சேர்த்துக் கொள்ளாராயின் சிறியோர் நல்லினச் சேர்க்கை பெற்று உய்வது எங்ஙனம் இயலும்? எனின், நல்லாரோ டிணங்கியிருத்தல் வேண்டும் என்னும் விதியினோடு சிற்றினஞ் சேர்தலாகா தென்னும் இந்நீதியை இணைத்துக் கருதுங்கால், ஒருகையால் கொடுத்ததை மறுகையால் கவர்ந்துவிடும் தருமத்தின் நீர்மை தோன்றுகின்றது. இதனை உட்கொண்டேபோலும் வள்ளுவர், "சிற்றினஞ் சேராமை" என்பது அதிகாரத் தலைப்பாயினும், 'சிற்றனஞ் சேர்ந்து அழியாதீர்' என்று அநற்றுவதைக் காட்டிலும், பெரும்பாலும் "நல்லினஞ் சேர்ந்து உய்யுங்கள்" என்ற வரவேற்கும் வாசகங்களையே அமைத்திருக்கின்றனர். இப்பத்துக் குறள்களில், 6, 7, 8, 9, ஆகியநான்குகுறள்களும் இயற்கையில் நன்மனமுடையோனை நோக்கி, "நீ, நின்னினும் நல்லாரைத்தேர்ந்து அவர்பால் பழகுதல்வேண்டும். பழகுவாயாயின் உனது இயற்கை வலிமைபெற்று எல்லாநலங்களும் அடைபவனாவாய்" என்று நேர்முகமாகக் கூறுகின்றன. 5வது பாட்டு, "நின்மனமும் செயலும் தூயவாயில்லையாயினும், நீ நல்லினத்தைச் சேர்வாயாயின், அவ்விரண்டும் தூய்மையுடையனவாய் அமையும்" என்றநன்னம்பிக்கையைத் தருகின்றது. 4வது பாட்டு, நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் ஆய்ந்து அறிகின்ற அறிவு ஒருவனுக்கு மனத்தின்கண் இயற்கையாயமைந்திருப்பதுபோல் மேற்பார்வைக்குத் தோன்றினும் வாஸ்தவத்தில் அவன் சேர்ந்த இனமே அவ்வறிவிற்கு மூலகாரணமாம் என்று அறைகின்றது. 3வது பாட்டு 7வது பாட்டோடுசேர்ந்து "நின்மனம் எவ்வகைத்தாயினும் நீ பயிலும் இனத்தை நோக்கி உலகத்தினர் உன்னை வைவதும் புகழ்வதுமாகும்" என்னும் இயல்பை எடுத்துக்காட்டுகின்றது. 2வது பாட்டு, நான்காவதோடு சேர்ந்து "நீ சேரும் இனத்திற்குத் தக்கபடியே உன் அறிவு மாறுபடும்" என்பதை வற்புறுத்துகின்றது. நல்லினஞ் சேர்வதன் நன்மையே நேர்முகமாகக்கூறி அதற்குக் காரணமும் காட்டுகின்ற தன்மையையே இதுகாறும் கண்ட இவ்வெட்டுக் குறள்களும் கொண்டுள. ஆயினும், காட்டிய காரணங்கள் தீயினஞ் சேர்வதில் தீமையுள தென்பதற்கும் ஒக்கும். அக்காரணத்தால் தீயினஞ் சேர்ந்தோர் தீமையுறுவார் என்பதையும் எதிர்மறைவாயிலாக இவ்வெட்டுக் குறள்களினின்றும் பெறலாம். அதுவுமன்றி இவ்வதிகாரத்திற்குப் பெயர்தந்த முதற்குறளும் ஈற்றுக்குறளும், பெரியோர் சிற்றினஞ் சேரலாகாதென விதித்து அதனான்வரும் தீமையையுஞ் செப்புகின்றன.

இதனைத்தான் கம்பர் ஏற்றுக் கொள்ளவில்லை பெரியோர் சிற்றினத்திற்கு அஞ்சவேண்டிய அவசியமிலது என்று துணிகின்றனர். பெரியோர் சிறியோருடன் சேர்ந்தக்கால், அச்சேர்க்கையால் சிறியோர்க்கு நலம் சில நேர்வதாயின் நேரலாமே யன்றிப் பெரியோர் மனத்தூய்மை மாசுறுதெனும் கொள்கையர் இவர். "இவ்வுறுதி இலதெனின் சிறியோர் நற்கதியுறுதற்குதவுமாறு பெரியோர் முன்வந்து அவரோடு பயில்தற்கியலாது. தூரநின்று நீதிபோதனைகள் மாத்திரம் செய்வதில் பயனில்லை. அவர்களோடு ஒருவராய்ப் பழகிப்பழகி அவரியல்பு உயர்ந்திடுமாறு புரிந்துதவல் வேண்டும். இன்னவாறு செய்யுங்கால் தமக்கே தீது வருமெனவஞ்சி வாளாவிருப்பாராயின், அவர் உண்மையிற் பெரியாரலர். சுயநய சிந்தனையுடையவர்; தம்முடைய உறுதியில் தாமே நம்பிக்கைகொள்ளாதவர்." என்று, இன்னபல வகையில் எண்ணுவாராய கம்பர், "சிற்றின மஞ்சும் பெருமை" என்னும் இலக்கணத்தைத் தழுவாது, இவ்வரைக்காட்சிப் படலத்தில், மன்னவர் பொற்றேர் மலைமிசைச் சென்ற சுவட்டினை உற்று நோக்கியாங்கு,

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத்
திருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம். [தோடி

[தெளிந்த அறிவுடைய பெரியோர் சிறியவர்களைச் சேர்வாராயினும், அச்சிறியவர்களுடைய மயங்கிய தன்மையை மாற்றுவார்என்னும் இதுவே உலகத்தின்கண்நிகழ்கின்றது. இரதமானது தான் உருண்ட விடமெல்லாம் அதன் பொன் சக்கரம் உரைத்து உரைத்து ஓடிய கரிய பாறைக்கல்லையும் தன்னுடைய பொன்னிறமே யாக்கிவைத்தது]

என்னுமித் தத்துவத்தை அகமார்க்கமாய் உரைத்துக் கொள்ளலாயினர். வழக்கு, என்பது வழங்கிவரும் வழக்கம். உலகத்தில் சொல்லிக்கொள்வது இதற்கு வேறாயிருப்பினும் உண்மையில் நிகழ்வது இதுவே என உணர்கின்றார் கம்பர். நிலத்தியல்பால் நீர்திரியும் எனக் கீழுள்ளது மேல்வருவதைத் திரிக்குமென்ற வள்ளுவர்க்கு எதிராய்க் கம்பர் மேல்வருவது கீழ்இருப்பதைத் திரித்த பரிசு இங்குக்காண்கின்றார். வழக்கே என்பதினுள்ள ஏகாரத்தைப் பிரித்து இதுவே எனச் சேர்த்துக்கொண்டோம். "சொல்வோர் ஏதேனுஞ் சொல்க, வழக்கமதில் நிகழ்வது பெரியோர் சிறியவர் தன்மையை மாற்றுவர் என்பது ஒன்றே. பெரியோர் இழிவுறார்" எனச் சாற்றுகின்றார் கம்பர். மற்று, வழக்கே, என்பதை 'வாதத்திற் கிடமானதே' என்ற பொருளில் கொண்டு "இதற்கு எதிர் உரைப்பார் சிலர் உளர் என்பது அறிவேன். எனினும் இதுவே என் மதம்" என்னுந் துணிபினால் கூறினாரென்று பகரினு மொக்கும். ஆதலின், வடநூற்புலவரும் தென்மொழித்தேவரும் வகுத்துள தொன்னெறிக்கு மாறாக வழக்கிட நினைத்த கம்பர், மீண்டும் மீண்டும் தன்மதம் நிறுவமுயல்வதைக் காணலாம். நீர்விளையாட்டுப் படலத்தில் தயரதன் பரிவாரம் பொய்கையுக் காடிய பெருமையை,

ஆன தூயவ ரோடுட னாடினர்
ஞான நீரவ ராகுவர் நன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு நாறின வேறினி வேண்டுமோ

[தூயவர்களானவர்களுடன் சேர்ந்து பழகினவர் ஞான குணத்தை உடையவராவார், என்பதே தக்கது. ஏனெனில் இப்பொய்கையில் வாழும் மீன்களும் அம்மாதர்களோடு பழகியதால், தேனும் கஸ்தூரியும், தேக்கு அகில் இவைகளின் புகையும், ஆகிய இவைகளின் நன்மணமே பெறலாயின, வேறே இனி உரைக்க வேண்டுமோ]

என்றெடுத்துக் காட்டலாயினர் மாதரும்மீனும் உடன் ஆடுங்கால் அம்மாதர் மீன்முடை பெற்று நீங்கினாரலர், அம்மீன்களே அவர் நன்மணத்தை வாய்க்கப் பெற்றன என்பதை அறிவுறுத்தி, "வேறினி வேண்டுமோ" என்னுங்கால் வாதுசெய்யுங் குரல் தோன்றலாகின்றது. இதுவுமன்றிப் பின் கோலங்காண்படலத்தில், சீதாபிராட்டிக்கு முத்துவடம் புனைந்ததைப் பகருங்கால் இவர்,

மொய்கொள்சீ றடியைச் சேர்ந்த
முளரிக்குஞ் செம்மை யீந்த
தையலா ளமிழ்த மேனி
தயங்கொளி தழுவிக் கொள்ள
வெய்யபூண் முலையிற் சேர்ந்த
வெண்முத்துஞ் சிவந்த வென்றால்
செய்யரைச் சேர்ந்து ளாருஞ்
செய்யராய்த் திகழ்வ ரன்றே.

[நெருங்கிவந்து தன் சிறுபாதங்களைச் சேர்ந்த தாமரைக்கும் செம்மையைக் கொடுத்த திருமகளாகிய இச்சீதாபிராட்டியின் அமிர்தம்போன்ற அருமையான மேனியில் திகழ்கின்ற செந்நிறத்தைத் தழுவிக்கொண்டதால், அவளது விரும்பத்தக்க ஆபரணங்களணிந்த கொங்கைகளில்சேர்ந்த வெண்மையான முத்தும் சிவந்துபோயிற்று. இதனின்று, செம்மையானவரைச் சேர்ந்தவரும் செம்மையாய் விளங்குவார் என்பது உண்மையேயன்றோ.]

என மீண்டும் செம்மையிற் சிலேடைவைத்து, வெண்முத்தும் சிவந்தமேனியுஞ் சேருங்கால், செம்மை வெளிற்றுத்தன்மை பெறாமல், வெளுத்திருக்கும் முத்தே செம்மையைப் பெற்றதைக் காட்டும்போதும் 'சிவந்த வென்றால்' என்னும் வாசகத்தால் வழக்காடு முறையை நினைப்பூட்ட லாகின்றனர்.

இவ்வுரைகளால் வாதுசெய் முறைக்கொக்கத் தன் மதம் நிறுவுதற்குக் கம்பர் நினைத்தாரெனில், அவர் தான் வேறுபடுவது எவரோடென்று எண்ணியிருத்தல் வேண்டுமென்பதை ஊகிக்கப்புகுங்கால், பெரும்பான்மை வள்ளுவரையே எதிர்வைத்துப் பேசுகின்றனர் என்னற் கியலுமாறு, "சிற்றினஞ்சேராமை" என்பதற்கிணையாய்ச் 'சிறியவர்ச்சேரினும்' எனவும், "மனந்தூய்மை" முதலாகக் குறளடிகளில் வந்துள 'தூய்மை' என்னுஞ் சொற்களுக்கு இணையாக "ஆன தூயவர்" என்றும் சொற்றொடர்கள் வந்திருக்கக் காண்கின்றோம். வள்ளுவரும் நல்லினச் சேர்க்கையின் உறுதியையே பெரிதும் பாராட்டித் தீயோர் உறவால் வருந் தீமையை ஒருசிறிதே குறித்தார். அச்சிறு குறிப்பையும் கொள்வதற் குடன்படாவகையில் கம்பர் வேறுபடுகின்றனரே யன்றித் திருவள்ளுவர்க்கு நேரெதிராய் அவர் கருதினாரல்லர். பெரியோரைச் சேர்வதால் சிறியோர்க்குத்தீதுளது என்பதன் அமைதியின்மையைக் கம்பர துணர்வு கடிதின் கண்டது. "மேலவர் சென்று சிறியவரைச் சேரினும், அம்மேலோர்க்கு என்ஞான்றும் யாதும் பழுதிலது, சிறியரே

பொன்னுவார், மணமும் பெறுவார்; தெருளாத வெள்ளையர் செய்யரைச் சேருங்கால் செம்மை நனி யுற்றுத்திகழ்வர்—இதற்கு மாறுபட்ட இழிவு பெரியோர்க்கில்லை'' என்று செவ்வி நேருந்தோறும் கம்பர் செப்பலுற்றனர். ஆயினும், அச்சிறியோர் நீக்குணம் பெரியோரைத் தீண்டுவதென்பதும் எக்காலமும் இலதாமோ வென்றவோ ரையமும் இவர்பால் ஒரு சிறிது உற்றது போலும்; ஆதலின் இப்படலத்திலேயே இச் செய்யுளிற்குப் பன்னிரு செய்யுள்களுக்கப்பால், தரைபாவாது தாவியோடும் பரியின் செய்தியைப் பகருமுகத்தான் கம்பர்,

> தீயவரொ டொன்றிய திறத்தரு நலத்தோர்
> ஆயவரை யந்நிலை யறிந்தனர் துறந்தாங்
> கேயவரு நுண்பொடி படிந்துட னெழுந்தே
> பாய்பரி விரைந்துதறி நின்றன பரந்தே.

[தீயவர்களுடன் சேர்ந்த, திறமையின் அருமைவாய்ந்த நல்லவர், அவர் அந்நிலைமாறாது அப்படியே இருக்கின்றதை அறிந்தனராயின், அவர்களைவிட்டுத் தாம் அகன்றுசென்று விடுவதைப்போல், தம்மேல் தூளிகள் படியவருவது கண்டவுடன் பாய்கின்ற குதிரைகள் மேல்கிளம்பி அப்புழுதியை உதறிவிட்டுத் தரையில் கால் படாமலே செல்லலாயின]

என்று தானுற்ற ஐயத்தால் சோர்வடையாது காட்டுவாராவர். பார் மிதித்த பரி புழுதியால் பழுதுறக் கண்டது; எனினும் அப்புழுதி பூசி இழிந்ததில்லை. உதறித் தான் உயர்ந்துபோயது.

சிற்றினஞ் சேர்தல்பற்றித் தமிழிற்குக் கதியெனக் கருதப்பெறும் இருபெரும் புலவோர்க்கிடைநடக்கும் கொள்கை இவ்வகையில் ஒருசிறிது வேறுபட்டு வழங்கலாகின்றது. ஆயுனு மவ்விருவருக்குங் கருத்தொன்றே என்று துணியும்வண்ணம் இவ்விடங்களுக்குப் பொருள்படுத்த இயலுவ தொன்றாயின் அஃதே சால்புடைத்தாம். இவ்விதம் சந்துபடச் செய்யுங் கருத்தினோடு நோக்குங்கால் திருக்குறள் திறத்தினில் ஒன்றிரண்டு உன்னியுரைக்க உளவாம். 'சிற்றினஞ் சேராமை' என்னுமிவ் வதிகாரம் பொருட்பாலில், அரசியலில் 'பெரியாரைத் துணைகோடற்கு'ப் பின்னும் 'தெரிந்து செயல்வகைக்கு' முன்னும் வைக்கப்பெற்றிருக்கின்றதால் எய்தும் இடக்குறிப்பு ஒருபுறமிருக்க, அவ்வதிகாரத்தினளவு ஆயுங்காலையில் தொல்லுரை தழுவாச் சிலபொருள்கள் எய்துதலும் இயலும். 'சிற்றினஞ்சேராமை' என்பதைச் சிறிய இனத்தை (அஃதல்லாதவர்) சென்று சேராமை என இரண்டன் தொகையாக்கருதாமல் 'சிற்றினம்தம்முள் சேர்ந்துகொள்ளாமை' என எழுவாய்த் தொடரில் அமைத்தலும் அமையும். ஆயின், இவ்வதிகாரம், பெரியோரை நோக்கி "நீர்சிறியர்பாற் சேரன்மின், நுமக்குத் தீது விளையும்'' என வெருவர உரைப்பதின்றிச் சிறியோரை நோக்கி, "நீர், ஒருவரோடொருவர் கூடிக்குலவன்மின்; நும்மிற் பெரியோரைத்தேடி அடைமின்; அதனுன் நுமக்கு ஆக்கமுள்ளது'' என அன்புடன் அழைத்த பெற்றியதாம். தலைப்பினிற் கிப்பொருள் ஏற்றினால் அதற்கிணங்கவே, பெரியோரைச் சேர்வதன் நன்மையைப் பெருக வுரைத்திருக்குந் தன்மை இவ்வதிகாரக் குறள்களுக்குள் அமைந்திருப்பதை முன்னர்க் குறித்துளோம். சிற்றின மஞ்சும் பெருமை, சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்துவிடும்'' என்னும் அம்முதற்குறளும் இப்பொருட்கு இடர்ப்படுத்தி நிற்றல் வேண்டா. "சிற்றனமஞ்சும்பெருமை'' என்னுமித்தொடர், சிறியரைப் பெரியோரஞ்சுவர், என்னாது பெரியோரைச் சிறியோரஞ்சுவர் என்னும் பொருள்வேண்டின் தரலாமே. ஆயின், சிறியவர் பெரியவர்களோடு சேர்வதற்கு நாணத்தால் அஞ்சி அகல்வாராகித் தம்போன்றவர்களோடேயே எளிதிலுறவுபூண்டு அளவளவா நிற்கின்றனர் என்னுமிவ் வுலகத்தியல்பே இப்பாட்டில் எடுத்தியம்பலாயிற்று. இதனையே நாயனார் மீண்டும் 'பெருமை' என்னுமதிகாரத்தில், "சிறியார் உணர்ச்சியில் இல்லை, பெரியாரைப் பேணிக்கொள்வோம் என்னும் நோக்கு'' என்ற பாட்டினால் வற்புறுத்துகின்றனர். எவ்வெவரநுபவத்திற்கு மிஃதியைந்ததே. எனின் சிறியோரைக் கைவிதிர்த்த காலத்து அவரைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமெனுங் கடமையும் பெரியோர்க் கிதனாலோதப் பெறுகின்றது. மற்றினி, "நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி னல்லற் படுப்பதூஉமில்'' என்ற ஈற்றுக்குறளும் கடக்கொணுவாறு இடைகிடக்கக் காணவேண்டா. சிறியோர்க்கு நல்லினத்தைச் சேர்வதுபோன்ற நன்மையுமில்லை; சிறியோர் சிற்றினத்தையே சேர்ந்தொழுகுவது செய்யும் அல்லலைப் போல் அல்லல் படுத்துவதும் பிறிதொன்றில்லை, என்னும் பொருளும் அன்னதற் கியற்கையே யாம். நிலத்தியல்பால் நீர்திரியு மென்பதும், மனத்துளதுபோலக் காட்டினும் அறிவு இனத்துளதாகு மென்பதும், சிறியோர் தம்நிலை தெரிந்து கையறவேண்டியதில்லை என்று அவர்களை நல்லோர்பால் உய்ப்பதற்கு வேண்டிய ஊக்கம் அளிப்பதற்கேயாம். எனின், இப்பொருளை ஏற்போமேல் கம்பருக்கும் வள்ளுவருக்கும் இனியொரு பேதமு மிலது. பெரியோர் சிறியோரைச் சேர்வதால் சிறியோர்க்கு நன்மை உளவாதல் இப்பொருளின் இருவர்க்கும் ஒருதலை. பெரியோர் அல்லலுற்றுர் என்பதை வள்ளுவர் வெளிப்படையாக விளம்பாததொன்றே எஞ்சி நிற்கின்றது. அதற்கும், "நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி னல்லற் படுவதூஉ மில்'' என்று ஒரே எழுத்தை ஈற்றுக்குறளில் மாற்றிப் படிப்போமாயின், 'தீயினத்தின்' என்பது கருவிப்பொருள தாகிச் சிறியோரைச் சேர்வதால் அல்லல் படுவதெங்குமில்லை என்ற மறுப்புரை பொருத்தமுடையதாகும். கம்பரோடு 'ராஜி' செய்துகொள்ளும்பொருட்டுத் திருவள்ளுவர் ஒரு எழுத்து விட்டுக்கொடுக்க மறுக்கமாட்டார் என நினைக்கின்றோம்.

கூனியின் சேர்க்கையால் கைகேசி தன்னியல் திரிந்தாள்போல் நிற்கின்றவிடத்தும் கம்பர் தன் கொள்கையையும் அவள் நிறையையும் காக்குமாறு, இமையோர் மாயையின் சூழ்ச்சியாலும், அவர்பெற்ற நல்வரவு உண்மையாலும், அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும் அவள் தூய சிந்தையுந் திரிந்ததெனத் தெள்ளிதின் காட்டலாகின்றார்—மந்திரையின் மதியன்று, அவளோடிவ ளிணங்கியிருந்ததாலு மன்று.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது

இலக்கிய நயங்கள் பாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

NATIONALBOOKS
AT HALF PRICE AND LESS.

	Price—Original Rs.	A.	Reduced Rs.	A.
Duties of man, Mazzini ...	0	12	0	6
My Jail Expeiences, by Mabatma Gandhi ...	0	12	0	6
Young India 1919 1922 ...	4	0	3	0
Significance of Indian ... Nationalism, by H. M. Howsin ...	2	8	1	0
India's Challenge to civilization, by H. M. Howsin.	2	0	1	0
Gandhi and Anarchy, by Sir Sir C. Sankaran Nair ...	1	8	0	12
Revolutionary Biographies by R. W. Postgate	1	8	0	8
Philosophy of Non-co-operation, by Bhagavan Das M.A.	1	0	0	8
The Plunder of India's Wealth, G. V. K. Rao ...	1	0	0	8
Indian Industrialism, by G. V. Ganapathy Aiyar...	1	0	0	8
Meaniag of Non-co operation, by C. F. Andrews ...	0	12	0	4
Ethics of Destruction, by Mahatma Gandhi ...	0	12	0	4
Key to Yerrowada, by M. Mahomed Ali ...	0	8	0	4
Our Educational Problem, by Lala Har Dayal, M. A. ...	1	8	0	12
Soul of India, by B.C. Pal	1	8	0	12
Advance India and Issue in India by B Hougton I.C.S.	0	8	0	4
C. D Report (Few copies only left, ...	1	0	0	4
Development of Democracy in India K Rajeswara Row.	2	0	1	0
Non-co operation in other, lands by Fenner Brockway	1	0	0	8
India and its Government, by Fenner Brockway ...	0	8	0	4
Dyarchy and after, by C. R. Readdy, M.A. ...	0	4	0	2
Charka, with an introduction. by Sir P. C. Roy ...	0	4	0	2
The Science of Sex by an M. D. ...	2	0	1	0
Faded Flower, by K. Rajagopal ...	1	0	0	8
Imperialism, by K. M. Panikar, M. A. ..	1	0	0	8
The New Russia, by W Postgate ...	0	12	0	6
Premanand and Pushpavati, by Namonarayana ...	0	8	0	4
A passing Phase of politics, by N. C. Kelkar M.L.A. ...	1	4	0	10
Leprosy in India, by T. S. Krishnamurthy Iyer ...	0	8	0	4
India and the Empire, by E. Carpenter ...	0	4	0	2
The Resurrection of the Congress by D. N. Bannerjee ...	0	4	0	2
Christ of to-day, by Rev. Holmes ...	0	4	0	2

Note.—A further discount of 10 per cent will be given on orders of not less than 15 books from the above list at a time and this concession holds good till the end of December 1929.

B. G. Paul & Co.,
Publishers. G. T. Madras.

கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம்	ரூ	5	0
அயோத்தியாகாண்டம் ...		5	0
ஆரணியகாண்டம்		4	0
கிட்கிந்தாகாண்டம் ...		4	8
சுந்தரகாண்டம்		5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய
அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,
புரசைவாக்கம், சென்னை.

Our Publications

Kamban's Kosala.

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதியசம். விலை அணா 4.

விசித்திர விளக்கு

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

வர்த்தமானம்

ஜலகஷ்டம்:—இங்கிலாந்தில் ஜலக்கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றதென்றும், போதிய ஜலவசதி இல்லாமையால், அநேக நெசவு மில்கள் மூடப்பட்டனவென்றும், ஜனங்கள் ஒருவேளைக்குமேல் ஸ்நாநம்செய்து ஜலத்தை வீணுக்காது இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

***

நான்கநேரிதாலுக்கா மஹாநாடு:-நான்கநேரி தாலுக்கா அரசியல் மஹாநாடு ஆகஸ்டு மாதம் 17, 18-தேதிகளில் திருக்குறுங்குடியில் ஸ்ரீ எஸ். சீனுவாஸ ஐயங்கார் அவர்கள் தலைமையில்கூடும். ஸ்ரீ ராஜாராம் பாண்டியன் தேசியக்கொடி யேற்றுவார். மஹாநாட்டில் கதர்க்காட்சிச் சாலையும்அமைக்கப்பட்டுள்ளது.என்று தெரியலாகின்றது.

***

வைசிராய் தென்னுட்டுயாத்திரை:—டிசம்பர்மாதத்தில் வைசிராய் லார்ட் இர்வின் தமது மனைவியுடனும் பரிவாரங்களுடனும் தென்னுட்டில் சுற்றுப்பிரயாணம் செய்வார் என்றும், டிசம்பர் மாதம் இரண்டாந் தேதி திருவாங்கூர் செல்வாரென்றும் அக்காலை ரீஜண்டு மஹாராணிக்கு ஸி. ஐ. பட்டம் அளிகப்படும் என்றும் திருவநந்தபுரம் செய்தி கூறுகின்றது.

***

டிராம்வேத் தொழிலாளர்:—சென்னை டிராம்வேத் தொழிலாளர் கூட்டமொன்று சென்றவாரம் ஸ்ரீ நாகேச்வரராவ் பந்தலுஅவர்கள் தலைமையிற் கூடிற்று. காலஞ்சென்ற திவான்பகதூர் தணிகாசலஞ் செட்டியார், ஸர். எம். ஸி. டி முத்தையசெட்டியார், சட்டசபை அங்கத்தினராய் இருந்த ஸ்ரீபக்தவஸ்தலநாயுடு, அடைந்த மரணம் குறித்து ஒருஅனுதாபத்தீர்மானஞ் செய்யப்பட்டது. தொழிலாளர் நன்மைக்கென ஐக்கிய முறையில் தொழிலாளர் நிதிகொண்டு பண்டகச்சாலை யொன்றை ஸ்தாபிப்பதென்றும், டிராம்வே அதிகாரிகள் வேலைக்காரர்களுக்கு வருஷத்திற்கு இரண்டு தொப்பிகள் கொடுக்க வேண்டுமென்றும், இப்பொழுது காலியாகவிருக்கும் டிராபிக் சூப்பிரண்டண்டு உத்தியோகம் ஒரு இந்தியருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன.

***

புத்தக வரவு:—தமிழ் வேதமெனக் கொண்டாடப்படும் மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய திருவாசகத்தைத் தமிழ் நாட்டோர் படித்து ஈசனது கழலடிச் சேவையில் ஊக்கமுறவேண்டிச் செய்யூர்ஸ்ரீமான் மு. சுப்பிரமணிய முதலியார், குறைந்தவிலையதான இப்பதிப்பைப் பிரசுரித்துள்ளார். காலிகோ கட்டடத்துடன்கூடிய இப்புத்தகத்தின் விலை 4 அணாவாதலால் எல்லோரும் எளிதில் வாங்குதற்கியன்றது இது. ஊதியங்கருதாது, சைவரானோர் அனைவர் வீடுதோறும் திருவாசகம் மணக்கவேண்டு மெனும் நல்நோக்கோடு பதிப்பிக்கப்பெற்ற இப்பதிப்பின் நோக்கம் சித்திபெறுவதாகுக. சிவபெருமானே மாற்றுருக்கொண்டு, இவ்வாசகத்தை ஏட்டில் எழுதினுர் என்றால் அதன் பெருமையை எடுத்தியம்பல் மிகையாகும். இது சென்னை நுங்கம்பாக்கம் ஜம்புலிங்கநாயகர் தெரு, 16-வது வீட்டில் இருக்கும் செய்யூர் ஸ்ரீமான் மு. சுப்பிரமணிய முதலியாரிடம் கிடைக்கும்.

***

ஹிந்து மஹாசபை:—டில்லி ஹிந்து மஹா சபைக் காரியதரிசியான பண்டிதர் தேவரத்ன சர்மா அடியிற் கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்:— 'ஹிந்துக்களின் ஐக்கியத்திற்கும் ஹிந்துதர்மபாதுகாப்பிற்கும் உழைத்துவரும் ஹிந்து மஹாசபை வன்மையுடன் வேலைசெய்யவும், அச்சபையில் இருந்து பாடுபடும் தொண்டர்களைச்சம்ரக்ஷிப்பதற்கும் பணம் அவசியம். இதுவரை இதற்கென நிதிசேமிக்க எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. நிரந்தர நிதிக்கென ஆளுக்கு 25 ரூபாய் வீதம் 1000 பேர்களிடம் பணம் வசூலிக்கவும், நிர்வாகவிஷயமாக ஏற்படும் சிறுசெலவுகளுக்கென ஆளுக்கு 1ரூபாய் வீதம் சபையினிடம் அனுதாபமுள்ளவரிடமிருந்து பணம் வசூலிக்கவும் எண்ணியுள்ளேன். நன்கொடை கொடுப்பவர்பேர் பத்திரிகைகளில் போடப்படும். இந்நோக்கம் நிறைவுறப் பொருளுதவ விரும்புபவர்கள் ஹிந்து மஹாசபைத் தலைமைக் கார்யாலயத்திற்கு இயன்ற தொகையை அனுப்பிவைக்கலாம்"

***

பெண்பாடசாலை:—தேவகோட்டை. ஸ்ரீ சுவர்ணமூர்த்தி பெண் பாடசாலைபோந்த தமிழ்ப்பண்டிதர், திருவாரூர் செந்தமிழ்ப் பானு பத்திராதிபர், திருவாளர்-வை. செல்லப்பா செட்டியாரவர்கள் மாணவிகளைப் பரீட்சித்துப் பின் வரைந்து தந்த எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:—

" இன்னிசை யுடனேற் றம்பெறுந் தேவை
யிலங்கழ கப்பவே ளியற்றுந்
தன்னிக ரில்லாச் சுவர்ணமூர்த் திப்பெண்
பாடசா லையுறுமா ணவிகள்
கன்னலோ தேனோ கனிரச மோநற்
கண்டினின் சுவையதோ வென்ன
நன்னய மாகப் பாடுமின் னிசையே
நமதுள மகிழ்வையீந் ததுவால் "

" சுந்தரச் சுவர்ண மூர்த்திபெண் பாட
சாலையிற் றுலங்குமா ணவிகள்
செந்தமிழ் மணியாந் திருக்குற ளுடனே
திகழுநா லடிமுத லாகி
வந்தநந் நீதி நூல்களுங் கற்பின்
மங்கையர் சரிதமுங் கற்றே
சொந்தமாய் நூல்நூற் குந்திற னுடனுந்
துலங்குதல் கண்டக மகிழ்ந்தேன். "

" செப்பரும் பெருமைத் தேவைநந் நகரிற்
சிறப்புறுந் தனவணி கேசன்
துப்புடை யழகப் பேந்திரன் சுவர்ண
மூர்த்திபெண் பாடசா லையுமாங்
கொப்பிலாச் சிரியரு முயர் முருகன்
ஒங்குமா ணவிகளு முயர்ந்தே
இப்புவி தனில்நீ டூழிவா ழியவென்
றிறையடி முகனைவாழ்த் துதுமே "

NATIONAL INSURANCE COMPANY LIMITED
(Head Office: CALCUTTA)

One of the most Progressive Indian Insurance Offices.

Its poularity is due to its low premiums and to the very liberal conditions it offers in all respects.

Before deciding to insure anywhere please compare our rates and compare the the benefits.

For Prospectus and Agency etc apply to:—

K. S. GOPALAYYA,
Branch Secretary
Madras Branch, Loane Square
Broadway, MADRAS.

REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

189066

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனுட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனுட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் கிஷேன் எபிகுயூரன் ஜினேன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனுட்டறிஞர் கட்டுரை (*மொழி பெயர்ப்பு*)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தரனுர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—			
	பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
	ஆப்லெதர் இல்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
	காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)